திருவள்ளுவர் ஆண்டு 2042

மார்ச்சு - 2011

# செந்தமிழ்

தொகுதி : 55
பகுதி : 5


விலை ரூ. 10/-

திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




தமிழக தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்புச் செயலாளரின் இல்லத் திருமண விழாவில்
கூட்டமைப்புத் தலைவர் இரா. குருசாமி அவர்களும் ஒருங்கிணைப்பாளர்களும்

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 55 திங்கள் இதழ்
பகுதி : 5 திருவள்ளுவர் ஆண்டு 2042
மார்ச்சு 2011




| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,**
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| "உள்ளாளப் பாடல்" ஓர்ஆய்வு | | 4 |
| | *வித்துவான் தா. குருசாமிதேசிகர்* | |
| சங்க இலக்கியத்தில் பெயர்களைத் தேடும் பாடல்கள் எண்ணிக்கை வரையறை | *முனைவர் அரசக்கண்ணன்* | 9 |
| முப்பால் சுட்டும் இன்பம் | *திருமிகு மா. மைதிலி* | 15 |
| சுந்தரரின் திருத்தொண்டத்தொகை | *ச.மங்கையர்க்கரசி* | 19 |
| தமிழ்ச் சொல் தகவற்பா | *புலவர் சி.பாண்டுரங்கன்* | 23 |
| விருந்து | *ஆறுவிரல் ஐம்பொறி* | 24 |
| பசுவே மேல் | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 27 |
| தமிழ் - இயற்கையுண்மைச் சிறப்பில் மொழி | திருமிகு. ப. வேல்முருகன் | 28 |
| பொய்கையார் | *பத்திராதிபர் மு.இராகவையங்கார்* | 33 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தோடு தொடர்புடையவர் தருமை ஆதீனப் புலவர் வித்துவான் தா.குருசாமிதேசிகர் அவர்கள் பரஞ்சோதியார் அருளிய திருவிளையாடற் புராணத்தில் இருந்து பாணபத்திரர் இசைத்த "உள்ளளக் கானத்தை" மிக அற்புதமாகத் தந்திருக்கிறார்.

முனைவர் அரசக்கண்ணன் அவர்களின் "சங்க இலக்கியத்தில் பெயர்களைத் தேடும் பாங்கு" நல்ல முயற்சி. இது தமிழ் ஆய்வு மாணவர்களைப் பெரிதும் ஈர்க்கும். திருமிகு மா. மைதிலி "பிறர்க்கு உள்ளத்தாலும், உரையாலும், செயலாலும் நன்மை செய்வதே அறத்தின் பொது நிலையிதனைக் கொண்டு நம்முன்னோர் ஒழுகினர்" என்று தம்முடைய முப்பால் சுட்டும் இன்பம் என்ற தலைப்பில் நிறுவுகிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய வாழ்வியல் தன்மையை அவர் பாடிய திருத்தொண்டத்தொகை மூலம் திருமிகு மங்கையர்க்கரசி அழகுபடுத்துகிறார்.

ஆம்பூர் புலவர் சி. பாண்டுரங்கன் அவர்களின் இனிமைக் கவிதையை இடையில் சுவைக்கிறோம். தொடர்ந்து செந்தமிழ் இதழில் தன்னுடைய கருத்துக்களைப் பதிப்பித்து வரும் ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் தரும் தமிழ் இலக்கிய விருந்து, அன்னாரின் இலக்கியச் செழுமையை இனிதே விதைக்க, முன்னாள் அமைச்சரும் கவிவேந்தருமாகிய கா. வேழவேந்தன் அவர்கள் தமிழன் பேசும் தமிழ் மொழியை விடப் பசுமாடு பேசும் தமிழ் மொழி சிறந்தது என்று மரபுக் கவிதை மூலம் சாடுகிறார்.

இராமலிங்கசுவாமிகளும், சங்கரச்சாரியார்சுவாமிகளும் சந்தித்த போது இருவரின் மொழிப்பற்றும் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைத் திருமிகு பா. வேல்முருகன் அவர்கள் தன்னுடைய கட்டுரையில் சுட்டுகிறார்.

நிறைவாகச் செந்தமிழ் இதழின் முதல் பதிப்பாசிரியர் பத்திராதிபர் மு. இராகவையங்கார் அவர்களின் "பொய்கையார்" என்ற கட்டுரையைச் சுவைக்கத் தந்து இம்மாத இதழ் தங்கள் கைகளில் தவழ்கிறது.

**முனைவர் கு. சின்னப்பா**

இனி நீங்களும் இதழும்....

# "உள்ளாளப் பாடல்" ஓர்ஆய்வு

*வித்துவான் தா. குருசாமிதேசிகர்*
தருமையாதீனப்புலவர், மதுரை

"பாணபத்திரர்" திருவாலவாய்ப் பெருமானுக்குப் பாடும் பணி செய்தவர்.

"பாலறாவாயர்" பாணபத்திரர் பாடும் பணியை நினைவு கூர்வார். திருக்கோளிலிப் பதிகத்தின் ஒன்பதாம் பாடலில் அச்செய்தி பதிவாகியுள்ளது.

*"பாணன்" இசை பத்திமையால்*
*பாடுதலும் பரிந்தளித்தான்*
*கோணல் இளம் பிறைச் சென்னிக்*
*கோளிலி எம்பெருமானே"*

என்று மதுரைச் செய்தியைக் கோளிலியில் வைத்துச் சித்தரிப்பார். பாணபத்திரர் அன்போடு பாடுதலும் "அருள் சுரந்து" பரிசில் பல அளித்தவன் "அரன்" என்பது பொருளாகும்.

## பாணபத்திரர்க்கு அருளியவை

மதுரைத் திருவிளையாடற் புராணத்தில் விறகு விற்றபடலம்' திருமுகங் கொடுத்த படலம், பலகையிட்ட படலம், இசைவாது வென்ற படலம், பாணபத்திரர் சம்பந்தம் உடையவை. இந்நான்கு படலச் செய்திகளும் பாணபத்திரரின் பத்திமையையும் அடிமைத்திறத்தையும் எடுத்துக்காட்டுவனவாகும். பண்டைத் தொல் காப்பியத்தில் பாணர்கள் அரசன் முன்றிலில் நின்றேத்தலும், இருந்தேத்தலும் உடையவரைச் சூதர், மாகதர் என்று குறிப்பிடப்படும். சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை முதலிய சங்க நூல்கள்-பாணர்களின் பண்புடைமையைப் பாங்குடன் விரித்துரைக்கும். பாணர் மரபினர் கோயில் சார்ந்து பணித்தலை நின்றனர் பிற்காலத்தில்.

## பாணபத்திரர் இயல்பு

'பண்பால் யாழ் பயில் பாணபத்திரன்' என்ற திருமுகப் பாசுர அடியும், 'தன்போல் என்பால் அன்பன்' என்ற அடியும், பாணபத்திரர் பிறர்

இயல் பறிந்து, பண்போடு பழகும் தன்மையையும் பரமன்பால் கொண்ட பத்திமையையும் குறிப்பிடுவனவாகும். 'பத்திமை' ஒன்றே பரமனை மகிழச்செய்யும் என்பதனைச் சுந்தரர் பத்திமையும் அடிமையும் கைவிடுவான் பாவியேன் என்று அருள்வார். திருவாதவூரார் பத்திவலையிற் படுவோன் காண்க எனத்திருவாய் மலர்வார்.

## குருவருள் உணர்த்தல்

ஏத்தற்கரிய மூத்தமூர்த்திகளாகிய-திருவாமூர் கொண்ட தருமைக்குருமணிகள் பாணபத்திரர் திறத்தை, பண்போடு ஆய்ந்த செய்தி நம் உணர்விற்கு விருந்தாகும். தருமையாதீனப் பதினோராம் திருமுறைப் பதிப்பு ஆசியுரையில் சிந்தித்த செய்திகள், நம் வாழ்விற்கு அரண் செய்வன :- அவை.

''இறைவன் அடியவர்கட்காக எழுதிய திருமுகம் இரண்டு. ஒன்று ஆலவாய்ப் பாணபத்திரர்க்காகச் சிவன், சேரமன்னர்க்கு எழுதியது. மற்றொன்று சிற்றம்பலவன், பெத்தலன் சாம்பானுக்காக, உமாபதி சிவத்திற்கு எழுதியது. சேரமன்னருக்கு எழுதிய திருமுகத்தில் பெருமிதப் பண்பும், அடியவராகிய உமாபதிசிவத்திற்கு எழுதிய திருமுகத்தில் எளிமைப் பண்பும் இழையோடுவது அறிந்து இன்புறத்தக்கது.

இறைவன் வேதம் ஓதினார் என்பர். ''வேதம் ஓதி. வெண்ணூல் பூண்டு'' என்பது சம்பந்தர் தேவாரம். தமிழ் வேதமாகிய திருமுறைகளை அடியவர்கள் வாயிலாகவே இறைவன் அருளிச் செய்தான்.

''எனதுரை தன துரையாக'' என்று தேவாரம் இனிதுணர்த்தும், இருப்பினும் இரண்டு திருமுகங்கள் இறைவன் அருளியவை தனிச்சிறப்பாகும்''

இவ்வாசியுரை வழியாகக் குருவருள் திறம் உணர்ந்து மகிழ்வதோடு இரண்டு திருமுகங்களின் இயல்பையும் இனிது உணர இயலும்.

## உள்ளாளச் செய்திகள்

பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம் பலகையிட்ட படலத்தில் பாணபத்திரர் சேரனிடம் பெற்ற பரிசு காரணமாகச் சோம்பி இராமல் பரமனை முப்போதும் இறைஞ்சி, கூடல் நாயகனின் அடிபணிந்து கூடல் விடையின் பின்புறம் நின்று பாடிவரும் ஒரு நாள் இரவில் மழை மிகுந்து பெய்து ''யாழ்மீட்ட'' துன்பம் நேர்ந்தது. நரம்பு

நனையாமல் இருக்க அப்போது அப்பாணர்க்குப் பலகையிட்டு அருள் செய்தார். அப்பொழுது அப்பாணபத்திரர் பாடிய ''பைந்தமிழ்ப்பாடல்'' ஒன்றில் உள்ளாளக்கானம் என்ற பாடல் திறம், இசைத் திறத்தோடு விளக்கியதைப் பரஞ்சோதியார் பாங்கொடு அருளிச்செய்வார். அப்பாடல் அகத்திறம் அமைந்தது.

*''ஒண்ணுதலாய் வெண்டலைகொண்டு உண்பலிக்கு*
*நம்மனையின் ஊடே கூடல்*
*கண்ணுதலார் உள்ளாளக்கானம் இசைத்து*
*என் உள்ளங் கவர்ந்தார் போலும்*
*கண்ணுதலார் பாடும் அவிநயம் கண்டு*
*ஆகம் கலப்பேன் பாதி.*
*பெண்ணுருவமாய் இருந்தார் வெள்கிவழித்து*
*ஆவி பெற்றேன் பொலும்''*

என்ற இப் பாடலில் வரும் உள்ளாளக்கானம் என்ன என்பதே நம் ஆய்விற்குரியது ஆகும்.

## இசைத்தமிழ் ஆய்வில்

உள்ளாளப்பாட்டுப் பாடுங்கால், இடை பிங்கலையை இயக்க மறுத்து மூலாதார முதல், பிரமந்திரமாகவும், இயக்கமாக்கி, நடுவு தொழில்வரப் பாடுவதென நச்சர் உரைப்பர். மேலும் சிந்தாமணி 658 ஆம் பாடல் உரையில் நச்சினார்க்கினியர் மேற்கோள் தந்து மேலாய்வு தருவார்.

*''உள்ளாளம் விந்துவுடன் நாதம் ஒலியுருட்டுத்*
*தள்ளாத தூக்கெடுத்தல் தான் படுத்தல்-மெள்ளக்*
*கருதி நலிதல் கம் பித்தல் குடிலம்*
*ஒரு பதின் மேல் ஒன்றென்றுரை''*

*''கண்ணிமையா கண்டந்துடியா கொடிறசையா*
*பண்ணளவும் வாய் தோன்றா பல் தெரியா-எண்ணிலிவை*
*கள்ளார் நறுந்தெரியல் கைதவதேன கந்தருவர்*
*உள்ளாளப் பாடலுணர்''*

என்ற இசைமரபுப் பாடல்கள் வழி உரை தருவார். இப்பாடல்களில் கொள்ளத்தக்கன தள்ளத்தக்கன உரைக்கப் படுகின்றன.

## விறகுவிற்ற படலத்தில்

சிந்தாமணியில் உரையாசிரியர், உரைத்த செய்திகளைப் பரஞ்சோதி முனிவர் விறகு விற்றபடலத்தில், பாடல் இசைப்பவர்க்குரிய

உடல், தொழில், குற்றம், பாடல் தொழில் குற்றம் இவை இவை என உரைத்தருளுவார். இறைவன் எழுது சித்திரம் போலிருந்து இக்குற்றங்களின்றிக் சாதாரிப்பண்பாடினார் என்பதும், அவர் பாடிய கீதம் உள்ளாளக் கீதத்திற்குரிய இலக்கணம் அமைந்திருக்கப் பாடினார் என்பதும், உணர்த்தியதைக் குறிப்பால் அறிந்து அப்பாடல்கள் வழி அறியலாம், சிந்தாமணி உரையாசிரியர், உள்ளாளத்தில் கம்பிதம் கலத்தல் 'குறை' என்பர். இன்று இதனைக் கம்பீரம் என்பர், கம்பீர நாட்டை எனவும் நாட்டை இராகத்தில் ஒரு பிரிவாக்கிப் பாடுவர். அளவோடு கம்பிதம் அமைதல் நன்று.

*''எடுத்தல் பாட்டுச் சமாம் எண்படுத்தல் மந்தம்*
*தடுத்து நலிதல் சமமாம்– தொடுத்தியன்ற*
*தள்ளாத கம்பிதந் தானடுக்கல் நற்குடிலம்*
*உள்வாங்கிப் பாடல் உணர்''*

என்ற பழைய வெண்பாவை எடுத்துக் காட்டி, இதன் வழி ''உள்ளாளப் பாடலில் கம்பிதம் (கம்பீரம்) கலத்தல் குறையாயிற்று'' என்று நச்சர் உரைத்தருள்வார். இவ்வுரை வரி வழியாக உள்ளாளப்பாடல் தன்மையை ஓரளவு உணர இயலுகிறது.

## தேவாரத்தில்

சுந்தரர் ''திருப்பைஞ்ஞீலி'' த் தேவாரப் பாடலில், இறைவன் பலிதற்கும் திருவுருவில் வந்து மங்கையர் பலரையும் மயக்கிய செயற்கூறுகளில் அவரது உள்ளாளப் பாடலும் ஒன்றாக அருள்வர்.

*''தக்கை தண்ணுமை தாளம் வீணை*
*தகுணிச்சம் கிணை சல்லரி*
*கொக்கரை குடமுழவி னோடிசை*
*கூடிப் பாடி நின்றாடுவீர்''*

*''மெய்யெலாம் பொடிக் கொண்டு பூசுதிர்*
*வேத மோதுதிர் கீதமும்*
*பையவே விடங் காக நின்று*
*பைஞ்ஞீலியேன் என்றீர்*

என்ற திருவாக்குகள் உள்ளாளப் பாட்டின் தன்மையாகும், திருநாவுக்கரசர் அருளிய திருவாமாத்தூர்த் திருத்தாண்டகம் முதற்பாடலில் இறைவன்

*''வண்ணங்கள் தாம் பாடி வந்து நின்று*
*வலிசெய்து வளைகவர்ந்தார்.* என்பதும் உள்ளாளமாகும்.

**நிறைவுரை**

உள்+ஆளம்= உள்ளாளம் என்று பிரிந்து உள்வாங்கி இசைத்தல் எனப் பொருள் படும். ஆளம் என்பது இன்று ஆலாபனை என்று வழங்கும். சரீரவினையில் பாடும் தொழிலை ஆளத்தி என்று 'சிலம்பு' உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் உரைப்பது சிந்திக்கத் தக்கது.

ஆளத்தியாவது-''மகரத்தின் ஒன்றால் சுருதி வரவும் பகரும் குறில் நெடில் பாரித்து-நிகரிலாத்-தென்னா தெனா என்று பாடுவரேல் ஆளத்தி-மன்னாகிச் சொல்லின் வகை'' என்ற வெண்பரி வழி, ''முதலில் பாடுமிடத்து, மகரத்தின் ஒற்றாலே நாதத்தை உச்சரிக்கு மரவு பகரிற் பாரித்து, முற் கூறிய நாத்தைத் தொழில் செய்யுமிடத்து குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலும் செய்யப்படும்''-என்ற அடியார்க்கு நல்லார் உரைக்குறிப்பு, ஓரளவு உள்ளாளப் பாடல் தன்மையைப் புலப்படுத்தி சிந்தாமணி உரைக்குறிப்புக்கும் துணை செய்யும். திருவிளையாடற் புராணத்தில் பாணபத்திரர் இசைத்த ''உள்ளாளக்கானம்'' ''பண்டைத் தமிழிசை மரபின் எச்சம்'' என்பதை அறிந்து மகிழ்வோமாக. ஆதலின் இன்று இசைத்துறையாளர் பலரும் உணர்ந்தால்-பலகை இட்ட படலத்து இசைக்குற்றங்கள் மட்டும் படித்து அறிந்தால். உள்ளாளப் பாடலின் உன்தத் தன்மை உயர்வுற்று விளங்கும். திருமுறை வாணர்களும் உடற் குற்றங்கள் நிகழாமல் உள்ளாள இசையோடு திருமுறை ஓதினால் இறைவனோடிசைந்திட நல்வாய்ப்புமாகும்.

# சங்க இலக்கியத்தில் பெயர்களைத் தேடும் பாடல்கள் எண்ணிக்கை வரையறை

முனைவர் அரசக்கண்ணன்

சங்க இலக்கியங்களை, அடி நிமிர்ந்ததால் பத்துப்பாட்டை வைப்பு முறையால் முதலாவதாகவும். குறைந்த அடிகளால் அமைந்ததால் எட்டுத் தொகையை அடுத்ததாகவும். பகுத்து வரிசைப்படுத்திக் கூறுவர். இந்தப் பகுப்பில் முதலாவதாக இடம்பெறும் பத்துப்பாட்டைப் பாடிய பாவலர் எண்மர் பெயர்களும் உள்ளன. ஆனால் மற்றொரு பகுப்பாக அடுத்து இடம் பெறும் எட்டுத்தொகையின் நிலை அவ்வாறில்லை.

*"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு*
*ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்*
*கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று*
*இத்திறத்த எட்டுத் தொகை"*

என்னும் பழம்பாடல் வாயிலாக நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவை எட்டுத்தொகை நூல்கள் என்பதையறிகின்றோம்.

இவ்வெட்டனுள், ஐங்குறுநூறு, கலித்தொகை, ஆகிய இரண்டிலும், தொகுக்கப்பெற்ற பாடல்களைப் பாடிய பாவலர் அனைவர் பெயர்களும் உள்ளன.

இவை நீங்கிய, நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல் , அகநானூறு, புறநானூறு ஆகிய ஆறு நூல்களில் பாடிய பாவலர் அனைவர் பெயர்களும் கிடைக்கப்பெறாமலே இருந்து வந்தன. அதனால் "சங்க இலக்கியம் என இப்போதுள்ள நூலில், 2331 பாடல்கள் உள்ளன. இவற்றுள் 102 பாடல்களை இயற்றிய பாவலர்களின் பெயர்கள் கிடைக்கப்பெறவில்லை" என்று கூறி வந்தனர்.

நற்றிணையில் 56 பாடல்களைப் பாடிய பாவலர்களின் பெயர்கள் தெரியவில்லை என்றும் கருதி வந்தனர். ஆனால் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை தேவர் ஏடு, புதுப்பட்டி ஏடு என்ற இரு ஏடுகளின்

படி இந்த 56 பாட்டுகளுக்கும் பாவலர் பெயர்கண்டு தம் 1966, 1968 ஆம் ஆண்டு நற்றிணைப் பதிப்புகளில் சேர்த்திருக்கிறார்.

இதனால் எட்டுத் தொகையில் பாவலர் பெயர் தெரியாத பாடல்களின் எண்ணிக்கை 46 ஆகவும், தொகை நூல்கள் 5 ஆகவும் ஆகியது.

அவ்வாறே பதிற்றுப்பத்தில் கடவுள் வாழ்த்துப் பாடலுக்கும், இன்னும் 5 பாடலுக்கும் ஆசிரியர் பெயர் காணவில்லை என்று கருதி வந்தனர். ஆனால் கடவுள் வாழ்த்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனாராக இருக்கலாமெனப் பலரும் எண்ணுகின்றனர் எனக்கூறி, தொல்காப்பியப் பொருளதிகார உரையிலும், புறத்திரட்டிலும், காணப்படும் இந்த ஐந்து பாடல்களும் இடம் விளங்காத, பதிற்றுப்பத்துப் பாட்டுகள் என்றே குறிப்பிடுவர். ஆசிரியர் பெயரில்லாத பாட்டுகள் என்று கருதவியலாது. ஆதலின் இவை இடம் விளங்காத பதிற்றுப்பத்துப் பாட்டுகளாகும்.

இதனால் இந்த ஆறு பாடல்களும், பதிற்றுப்பத்தும், பாவலர் பெயர் தெரியாப் பாடல்கள் என்றும், தொகை நூல் என்றும் கருதப்படுவதினின்றும் நீங்குவதனால், பாவலர் பெயர் தெரியாப் பாடல்கள் 40 ஆகவும், தொகை நூல்கள் 4 ஆகவும் ஆகின்றன.

இதுகாறும் 'பரிபாடல் திரட்டில்' பாவலர் பெயர் தெரியாத பாடல்களின் எண்ணிக்கை11 என்றே உ.வே.சாமிநாதையார், பெருமழைப் புலவர், பொ.வே.சோமசுந்தரனார், ந. சஞ்சீவி ஆகியோர் கூறிவந்துள்ளனர். ஆனால் என்சி.பிஎச் நிறுவனம் 8 பரிபாடல் திரட்டில் பதினொரு பாடல்களோடு மேலும் இரண்டு பாடல்களைச் சேர்த்துள்ளது. இதனால் இவ்வெண்ணிக்கை 42 ஆகிறது.

இவை குறுந்தொகையில் 10 ஆகவும், பரிபாடலில் 15 ஆகவும், அகநானூற்றில் 3 ஆகவும் புறநானூற்றில் 14 ஆகவும் உள்ளன.

எட்டுத்தொகையில் இயற்பெயரோடு கூடிய பாவலர் பாடல்கள் உள்ளன. உறுப்பால், ஊரால், கோத்திரத்தால், சமயத்தால், தெய்வத்தால், தொழிலால், நாளால், பாடல் பொருளால், பெற்றாரோடு தொடர்பால், மரபால், வழக்கவொழுக்கத்தால் பெயருடன் கொண்டு பாடிய பாவலர் பாடல்களும் உள்ளன. இளம், பெரு, குறு, நெடு என்ற அடையும், 'பாடிய' என்ற சிறப்பும் பெயரோடு கொண்டு பாடிய பாவலர் பாடல்களும் உள்ளன.

இவ்வாறின்றிப் பாட்டில் பயிலும் அருந்தொடரால் பெயர் சூட்டப்பட்ட பாவலர்களும் உள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 27 என்று ந.சஞ்சீவி, மு.சண்முகம்பிள்ளை ஆகியோர் குறிப்பிடுவர். இவ்வாறு கூறப்படினும் இவ்வெண்ணிக்கையில் வேறுபாடு கொள்வோரும் உண்டு. இதற்குக் காரணம் இயற்பெயராகக் கொள்வதை அருந்தொடர்ப்பெயராகக் கொள்வதேயாகும்.காட்டாக கபிலர் என்ற பெயரை அருந்தொடர் பெயராக விளக்கியுரைப்பர். இவ்வாறு பலவற்றை அருந்தொடர்ப் பெயராகக் காட்டுவர். இதனால், இவ்வெண்ணிக்கை மிகுதியாகிறது.

இவ்வாறு அருந்தொடரால் பெயர் பெற்ற பாவலர்கள் பலராய் இருக்க. பாடல்களுக்கு எவ்விதப் பெயரின்றியும் பெயர்களைத் தேடும் 42 பாடல்கள் இருக்கின்றன. இதற்குரிய காரணம் ஆய்வதற்குரியதாகும்.

எட்டுத் தொகை நூல்களிலுள்ள பாடல்கள் தொகுக்கப்பட்ட பாடல்களாகும், பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு ஆகிய நூல்களைத் தொகுத்தவர் . தொகுப்பித்தவர் யாரென்று தெரியவில்லை. ஆனால் இம் மூன்றும் நீங்கிய ஏனைய எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் பற்றிய விவரங்கள் உள.

நற்றிணையைத் தொகுத்தவர் பெயர் தெரியவில்லை யாயினும், பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி தொகுப்பித்தவனாவான். குறுந்தொகையைத் தொகுத்தவர் பூரிக்கோ. தொகுப்பித்தவர் யாரென்று தெரியவில்லை. ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழாராகவும் , தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையாராகவும் உள்ளனர். கலித்தொகையைத் தொகுத்தவர் நல்லந்துவனாராவர்.தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை. அகநானூற்றைத் தொகுத்தவர் மதுரை உப்பூரி குடிகிழான் மகன் உருத்திரசன்மனும், தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவதியும் ஆவர். ஆதலின் எட்டுத்தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட பாடல்களாகும்.

இவற்றில் தொகுத்தவரும், தொகுப்பித்தவரும் பாடிய பாடல்களும், தொகுப்பித்தவரைப் பற்றிப் பாடப்பெற்ற பாடல்களும் உள்ளன. நற்றிணையைத் தொகுப்பித்த பன்னாடுதந்த பாண்டியன் மாறன்வழுதி பாடிய பாடல்கள் நற்றிணையிலும் (97, 301), குறுந்தொகையிலும் (207) உள்ளன. ஐங்குறுநூற்றைத் தொகுத்த கூடலூர்கிழார் பாடிய பாடல்கள் குறுந்தொகையிலும் (166,167,274), புறநானூற்றிலும் (229) உள்ளன. இதனைத் தொகுப்பித்த யானைக்கட்

சேய் மாந்தரஞ் சோலிரும்பொறையைப் பற்றிக் கூடலூர்கிழார் பாடிய பாடல் புறநானூற்றின் 229 ஆம் பாடலாகவும், குறுங்கோழியூர் கிழார் பாடிய பாடல்கள் புறநானூற்றில் 17, 20, 22 ஆம் பாடல்களாகவும் உள்ளன. கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனார் பாடிய பாடல்கள் பரிபாடலிலும் (8:36-46), கலித்தொகையிலும் (நெய்தற்கலி) அகநானூற்றிலும்(43), நற்றிணையிலும் (88) உள்ளன.

இதனால் ''சங்கப் பாடல்கள் இயற்றப்பட்டதும், தொகுக்கப்பட்டதும் சங்க காலமே என்பதை முற்றிலும் உண்மையாக்குகின்றன எனக் கூறுவர். சங்க இலக்கியமாகிய எட்டுத் தொகையில் தொகுத்தோர். தொகுப்பித்தோர் பாடிய பாடல்களும், தொகுப்பித்தோர் பற்றிய பாடல்களும் இருப்பினும், அவர்கள் காலத்தில் பாடப்பெற்ற சமகாலப் பாடல்களை மட்டுமே தொகுத்துள்ளனர் எனக் கூறல் இயலாது. அதற்கு முற்பட்ட காலத்துப் பாடல்களும் அவற்றில் இடம் பெற்றிருத்தல் கூடும்.

அவ்வாறு தொகுக்கப்பட்ட காலத்தில் ஏடுகள் குவிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்போது ஆசிரியர் பெயருள்ள ஏட்டினின்றும், சில ஏடுகள் பெயர்ந்து போய், அவை பெயரில்லாத பாடல்களாக ஆகிய இருத்தல் கூடும். அதுவேயன்றித் தொகுக்கப்பட்ட காலத்திலேயே பெயரில்லாத பாடல்களாக இருந்திருக்கவும் கூடும். எவ்வாறாயினும் அவற்றிற்குப் பெயரில்லாது உள்ளன என்பதே இப்போதைய நிலை.

சங்க இலக்கியங்களைப் பத்துப்பாட்டென்றும் எட்டுத் தொகையென்றும் இரண்டாகப்புகுத்துப் பெயர் கூறுவர். நீண்ட அகவற்பாக்களின் தொகுப்பைப் பத்துப் பாட்டென்றும் "ஒவ்வொன்றும் பலராற் செய்யப்பட்டுத் தொழில் அளவுபட்டுப் பொருளென்பனவற்றுள் ஒவ்வொன்றால் தொகுக்கப்பட்டமையின் தொகை "என்று பெயரமைந்த காரணத்தை விளக்குவர்.

இவ்வாறே பத்துப்பாட்டிலுள்ள நூல்களுக்கும் எட்டுத் தொகை நூல்களுக்கும் பொருண்மை, பாடல் எண்ணிக்கை, பாவகை, அடியளவு என்பனற்றால் பெயரிட்டுள்ளனர். பத்துப்பாட்டில், திருமுருகாற்றுப்படை முதலாகப் பட்டினப்பாலை ஈறாக ஒன்பது பாட்டுகளும் பொருண்மையால், பெயரமைந்தனவாகும். எட்டுத் தொகையில், நற்றிணை, அகநானூறு, புறநானூறு என்பன பொருண்மையாலும், குறுந்தொகை அடியளவாலும், ஐங்குறுநூறு பாடல் எண்ணிக்கையாலும், பதிற்றுப்பத்து பாடல் எண்ணிக்கையாலும், பரிபாடலும், கலித்தொகையும் பாவகையாலும் பெயரமைந்தனவாகும்.

பத்துப்பட்டில் பத்தாம் பாட்டாக உள்ள 'மலைபடுகடாம்' நூலுக்கு அந்நூலில்,

*"அலகைத் தவிர்த்த வெண்ணருந்திறத்த*
*மலைபடுகடா அமாதிரத்தியம்ப"* (347-8)

என்று வரும் அடிகளால் "இதனைப் பாடிய புலவர் மலையினை யானையொன்றனுக்கு உவமித்து அதன் பல்வேறு திறப்பட்ட ஒலிகளைக் கடாம் என்று சிறப்பித்துக் கூறுகிறார். ஆதலின் இது 'மலைபடுகடாம்' எனப்பெயப் பெற்றது என்பர்" நச்சினார்க்கினியர். இவ்வாறு நூலில் வரும் தொடரால் நூலுக்குப் பெயரும் வைத்துள்ளனர்

இதுவேயன்றி நூலில் பயிலும் அருந்தொடரால் நூல் பகுப்பிற்கும் பெயர் சூட்டியுள்ளனர். "அகநானூறு 120 பாடல்கள் கொண்ட முதல் பகுதி 'களிற்றியானை நிரை' எனவும், 180 பாடல்கள் கொண்ட இரண்டாம் பகுதி 'மணிமிடை பவளம்' எனவும், இறுதியில் உள்ள 100 பாடல்கள் கொண்டது. ' நித்திலக்கோவை' எனவும் பெயர் கொண்டது, அகநானூற்றில் வரும் இம்மூன்று சொற்றொடர்களினாலேயாம்" என்பர்.

நூலுக்கும், நூல் பகுப்பிற்கு மட்டும், நூலிலுள்ள பாடல்களுக்கும் அப்பாட்டில் பயிலும் தொடரால் பெயர் குறித்துள்ளனர்.

ஐங்குறுநூற்றில் பாடல்களில் வரும் பொதுச்சொல்லாலும், பாடல் பொருளாலும் பெயர் குறித்துள்ளனர். கேழல்பத்து, குரங்குப்பத்து, கிள்ளைப்பத்து, மஞ்ஞைப்பத்து, தொய்யோப்பத்து என்பன பொதுச் சொல்லாலும், தாய்க்குரைத்தபத்து, தோழிக்குரைத்தபத்து, வெறிப்பத்து, செலவுப்பத்து, செலவழுங்குவித்தபத்து, தலைவிஇரங்குபத்து என்பன பாடல் பொருளாலும் பெயர் குறிக்கப் பெற்றப் பாடல்களாகும்.

பதிற்றுப்பத்தின் முதல் பாடலுக்குப் 'புண்ணுமிழ் குருதி' என்றும் இறுதிப் பாடலுக்கு 'வலிகெழுதடக்கை' என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதுவேயன்றிப் பதிற்றுப்பத்தில் விடுபட்ட பாட்ல்களுக்கும் முனைவர் வ.சுப.மாணிக்கம் பெயர் சூட்டியுள்ளார்.

இவ்வாறு நூலிலுள்ள பாடல்கள் அதில் பயிலும் அருந்தொடரால் பெயர் பெற்றது போல் இயற்பெயரைக் குறிக்காமல் பாடல்களின் அருந்தொடரால் பாடலாசிரியர்களும் பெயர் பெறலாயினர். செம்புலப் பெயனீரார் (குறுந். 40), ஊட்டியார் (அகம்.68), இரும்பிடர்த்தலையார் (புறம்.3) என்பன இவ்விதம் அமைந்த பெயர்களே. இவ்வாறு அமைந்த பெயர்களும் பலவாக உள.,

இவற்றை நோக்குங்கால், இலக்கியப் பகுப்பிற்கும், தொகுப்பிற்கும், தொகுப்பிலுள்ள நூல்களுக்கும், நூல்களிலுள்ள பாடல்களுக்கும், பாடலில் பயிலும் தொடரால் பாடலாசிரியர்களுக்கும் பெயர் சூட்டுவது சங்க கால மரபு என்பது புலனாகும்.

''முன்னைய ஆசிரியர்கள் கவிஞரின் பெயராகவுள்ள சொற்றொடர் கவிதையில் அமைந்திருத்தலைக் காட்டுவதோடு அமைந்தனர். எனவே இந்த ஆராய்ச்சி புதுத்துறை ஒன்றை இலக்கிய உலகிற்குக் காட்டுகிறது எனலாம்'' எனக் கூறி அருந்தொடர்ப் பெயராக அமைந்த சிறப்பினை விளக்குவர். இவ்வாறு பாவலரின் பெயராக அமைந்த அருந்தொடரைக் காட்டுவதும், அமைந்த சிறப்பினை விளக்குவதுமே இதுகாறும் இதன் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகும்.

சங்க மரபின் தொடர்பில் ஏதோவொரு காரணம் பற்றி இயற்பெயரில்லாத பாடல்களுக்குப் பாடலில் பயிலும் தொடரால் பெயர் சூட்டிச் சிறப்பிக்கும் பணி மேற்கொள்ளப்படாத நிலையில் ஆசிரியர் பெயரில்லாத பாடல்கள் 102 என்ற எண்ணிக்கையை ஏற்றுக் கொண்டு முனைவர் வ.சுப.மாணிக்கம் விடுபட்ட பதிற்றுப்பத்துப் பாடல்களுக்குப் பெயர் தந்தும், பிற 96 ஆசிரியர் பெயரில்லாத பாடல்களுக்கும் பொருந்துமாற்றை விளக்கியுரையாமல் அருந்தொடர்ப் பெயர்ப்பட்டியலும் தந்துள்ளார்.

ஆசிரியர் பெயரில்லாத பாடல்கள் 96 என்ற எண்ணிக்கையில் ஔவை சு, துரைசாமிப்பிள்ளை நற்றிணையில் 56 பாடல்களுக்குப் பெயர் காட்டியுள்ளதால், அவை கழிக்கப்பெற்று 40 பாடல்களாகும். அதோடு பரிபாடலில் புதியவரவான 2 பாடல்களும் சேர்க்கப்பட்டு ஆக 42 பாடல்கள் பாவலர் பெயரில்லாப்பாடல்கள் ஆகும். ஆனால் சிறப்புப் பெயர்கள் சூட்டுமாறு இதுவரை இப்பாடல்கள் விளக்கியுரைக்கப்படவில்லை.

''மரபு நிலை திரிதல் செய்யுட்கில்லை'' என்று தொல்காப்பியம் கூறும். அவ்வகையில் சங்க மரபையொட்டி இப்பாடலாசிரியர்களுக்கும் பாடலில் பயிலும் அருந்தொடரால் அரசக்கண்ணர் பொருந்துமாறு விளக்கிச் சிறப்புப்பெயர் சூட்டியுள்ளார் என்பதும் இவண் குறித்தற்பாற்று.

# முப்பால் சுட்டும் இன்பம்

திருமிகு மா. மைதிலி

**அறம் விளக்கம்**

மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே, முழுநிறைவடிவமே அறம் எனப்படும். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும் தீவினையின் பயனாகிய அறியாமையை அறுத்தெறிவதே 'அறம்' என்று ஆன்மிக வண்ணம் குழைத்த மற்றொரு விளக்கமும் இதற்குத் தரப்படுவதுண்டு.

பண்டைத் தமிழ் மக்கள் தனிமனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறத்தைக் கருதினர். மறுமைப் பேற்றை அளித்தாலும், அளிக்காவிட்டாலும் இவ்வுலக வாழ்க்கையில் தனி மனிதனும் சமுதாயம் நலமாக வாழ்வதற்கும், முன்னேற்றத்தை அடைவதற்கும் அறவாழ்வு இன்றியமையாதது என்னும் நம்பிக்கை நம் முன்னோர்களிடம் நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது. பல திறப்பட்ட விருப்புகளையும், வெறுப்புகளையும், தேவைகளையும், முரண்பட்ட எண்ணங்களையும், கருத்துகளையும் கொடுக்கும் பணியைச் செய்வதே தமிழன் கண்ட அறத்தின் உள்ளார்ந்த பண்பாக இருந்து வருகிறது.

அறம் என்னும் சொல்லிற்கு ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம் என்ற எட்டு வகையான பொருள்கள் பெருவழக்காக வழங்கப்பட்டு வருவதோடு, வேறு சில பொருள்களும் அருகிய வழக்காக வழங்கிவருகின்றன. ஞானம், உண்ணா நோன்பு, இல்லறம் என்பன போன்ற வேறு சில பொருள்களும் அறத்திற்குரியனவாகத் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. அறம் என்ற சொல்லிற்குரிய பொருள் பல்வேறு வகையாகப் பிற்கால மக்களுடைய மனநிலைக்கும், பழக்க வழக்கங்களுக்கும், தேவைகட்கும் ஏற்ற வண்ணம் மாற்றமும் வளர்ச்சியும் அடைந்திருப்பதை இவை அறிவிக்கின்றன.

## அறமாயின கருதுதல்

ஒவ்வொரு மனிதரும் எந்தச் சமுதாயத்தில் வாழ்கின்றாரோ அந்தச் சமுதாயத்தைப் பற்றிய தெளிவான அறிவினைப் பெற்று விளங்க வேண்டும்; சமுதாயத்தைப் பற்றிய தெளிந்த அறிவு ஒருவரைச் சமுதாய உணர்வுடையவராக்கும்; சமுதாய உணர்வு சமுதாயப் பற்றிற்கும் வழிவகுக்கும்; சமுதாயப் பற்றுச் 'சமுதாயத்திற்கு என்றும் தம்மால் ஆன நல்லவற்றைச் செய்யவேண்டும்' என்ற எண்ணத்தை உருவாக்கும். சமுதாயத்தில் பிறந்த ஒவ்வொருவரும் இத்தகைய எண்ணம் உடையவராக விளங்க வேண்டும்; அந்த எண்ணம் மேன்மேலும் வளர்ந்து பெருகி வலுவடைய வேண்டும். 'தாம் வேறு; தாம் வாழும் சமுதாயம் வேறு' எனக் கருதும் குறுகிய எண்ணம் விலகி 'இரண்டும் ஒன்றே' எனக் கருதும் ஒன்றிய நிலை ஒருவர் மனத்தில் உருவாக வேண்டும் என்பது வள்ளுவத்தின் எதிர்பார்ப்பு.

மேற்சுட்டிய உயர்ந்த குறிக்கோளை ஒருவர் அடைய வேண்டுமாயின் அவர் தம்மை - தம் மனத்தை முதலில் அடக்கி ஆள்பவராக விளங்க வேண்டும். எல்லை கடந்து சமுதாயம் அறிந்தோ அறியாமலோ தமக்குத் தீங்கு செய்யுமாயினும் அதைப் பொறுத்துக் கொள்ளும் மனப்பக்குவம் ஒருவருக்கு வேண்டும்; அதனினும் மேலாக, அதைப் பொருட்படுத்தாமல், இயலுமாயின், மறந்துவிடவும் வேண்டும் (குறள் 152). இஃது அரிதினும் அரிய செயல்தான்; எனினும், அத்தகைய குறிக்கோள் ஒருவர் சமுதாய அரங்கில் உயர வேண்டும் என்பதைத்தான் வள்ளுவம் எடுத்துரைக்கின்றது. மேலும், மனத்தில் நடுவுநிலைமை கொண்டு அணுகும்போதுதான் உண்மையும் பொய்மையும், நிறையும் குறையும் தெளிவாகப் புலப்படும். எந்த ஒன்றையும் அணுகும்போது வேண்டியவர், வேண்டாதவர் என்னும் வேறுபாடு காண்பது உலக இயல்பு; வள்ளுவர் இந்த இயல்பு நிலையிலிருந்து நீங்கி எதையும் நடுவு நிலைமையொடு அணுக எண்ண வேண்டும்; எண்ணியதொடு அமையாமல், அதன் வழிச் செயல்படவும் வேண்டும் என்று நெறியுரைக்கின்றார்; அந்தச் சமநிலை உணர்வும் எப்படிப்பட்டதாக அமைதல் வேண்டுமெனின், 'சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல அமைதல் வேண்டும்' என்பது வள்ளுவம். இந்த எண்ணம் ஒருவர் உள்ளத்தில் ஆழப்பதியுமானால், சமுதாயத்தை அவர் நம்புகின்றவர் ஆவார். சமுதாயமும் அவரை முழுமனத்துடன் நம்பும். இத்தகைய உண்மையான உறவே ஒவ்வொருவருக்கும் வேண்டற்பாலது ஆகும்.

## அறமாயின சொல்லுதல்

சமுதாயத்தில் நலிந்த பகுதியினருக்கு உதவ வேண்டும் என்னும் பரந்த மனப்பான்மை உள்ளவர்களாக ஒவ்வொருவரும் விளங்க வேண்டும்; அந்த உணர்வு மனமகிழ்ச்சியைத் தரும்; மனமகிழ்ச்சியோடு எந்தப் பொருளையும் பிறர்க்கு உதவும் பக்குவநிலை உருவாகும்; மனமலர்ச்சியோடு சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு எந்தப் பொருளைக் கொடுத்து உதவும்போதும் முகமலர்ச்சியோடு உதவ வேண்டும். அகமலர்ச்சி, முகமுலர்ச்சி ஆகியவற்றோடு இனிமையாகப் பேசியும் கொடுத்தல் வேண்டும் (குறள் 92). இனிய சொற்களும் உதட்டோடு நின்று வெளிவராமல் உள்ளத்தொடு பொருந்த வெளிவர வேண்டும். அதுவே உண்மையான சமுதாய அறம் ஆகும். (குறள் 93)

சமுதாயத்திற்கு வேண்டிய நல்லனவற்றை நாடி அவற்றை அப்படியே எடுத்துரைப்பின் அவற்றால் எவ்வகைப் பயனும் விளையாது. சொல்ல வேண்டுவனவற்றைப் பக்குவமாகவும், இனிமையாகவும் சொல்ல வேண்டிய அறக் கருத்துகளை இனிமையாகச் சொன்னால் சமுதாயத்தில் அல்லவை தேய்ந்து அறம் பெருகும்; பெரும்பயன் நல்கும் (குறள்கள் 96, 97). ஆகவே இனிமையாகச் சொல்வதே இனிது என வள்ளுவம் வகுத்துரைக்கின்றது. இனிமையாகக் கூறுவதேயாயினும் பயனுடையனவற்றையே கூற வேண்டும் (குறள் 200).

## அறமாயின செய்தல்

பொதுவுடைமை நோக்கில் அமையாத எந்த ஒரு சமுதாயத்திலும் வளவாழ்வு வாழ்வாரும் இருப்பர்; வறியவரும் இருப்பர். இஃது இயற்கை. வளவாழ்வு வாழ்பவர்கள் அல்லது பிறர்க்கு உதவ இயலும் என்ற நிலை உள்ளவர்கள், வறியவர்களுக்கு உதவி, அவர்களின் பசியைப் போக்குவதொடு அவர்களின் நிலை உயரவும் பாடுபட வேண்டும். இது சமுதாயக் கட்டமைப்பின் எதிர்பார்ப்பு. இதனையே ஈகை என்பார் வள்ளுவர். சமுதாய வறியார்க்கொன்றீவதே ஈகை (குறள் 261). எதிர்பார்ப்புக்கு ஒத்துழைத்து எல்லாரும் வாழ-குறிப்பாக நலிந்தவர்களும் வாழ இயன்ற அளவு ஒவ்வொரு மனிதரும் உதவிட வேண்டும் என வள்ளுவம் நெறியுரைக்கின்றது. இதனால் சமுதாயத்தில் வாழும் நலிந்தோரை அரவணைத்துச் செல்லும் நிலைமை உருவாகும்.

## அறத்தின் இலக்கணம்

ஒரு மனிதன் ஒரு சமூகத்தைச் சேர்ந்து வாழ்வதற்கும் அல்லது தனியே நின்று தனி மனிதனாக இயங்குவதற்கும், அத்தகைய

மனிதனுடைய பண்பு நலனை உருவாக்கி வைக்கும் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்கும், செல்வாக்குகளுக்கும் 'அறம்' என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. நேர்மையான வாழ்க்கைச் சட்டமாக அறம் விளங்குகிறது. அதை வாழ்க்கையில் கடைபிடிப்பதன் பயனாக இம்மையில் இன்பமும், மறுமையில் வீடுபேறும் அடைய முடியும் என்று முன்னோர்கள் நம்பினர். அது ஒழுக்க இயல், சமயம் ஆகிய இரண்டும் இணைந்த ஒன்றாகக் காணப்படுகிறது. தனி மனிதனுடைய உரிமைகள், கடமைகள், சமூகப் பிணைப்பு, குடும்ப இணைப்பு, பழக்க வழக்கங்கள், விருப்பு வெறுப்பு என்னும் இயல்புகளாகிய அனைத்தும் அறத்தின் கோட்பாட்டினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அறம் என்பதைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர் ஒரு கொள்கையாகவோ, கோட்பாடாகவோ, சமயமாகவோ கருதவில்லை. இதனை அவர்கள் வாழ்க்கை நெறியாகவே கருதிப் போற்றினர். ஒழுக்க நெறிக்குரிய விதி முறைகளின் தொகுப்பாகவே அறம் கொள்ளப்பட்டது. அறம் தனிமனிதன் ஒருவனுடைய கடமைகளையும், செயல்முறைகளையும் சமுதாயத்தின் ஓர் உறுப்பினன் என்ற முறையில் நெறிப்படுத்துகிறது என்பதும், மனிதனைப் படிப்படியாகப் பண்பட்டு விளங்கச் செய்கிறது என்பதும் மனித வாழ்க்கையின் லட்சியமாகப் 'பேரா இயற்கைப் பெருநிலை' யாகிய வீடுபேற்றை அடைய முயலுமாறு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது என்பதும் நம்முடைய முன்னோர்களின் நம்பிக்கையாகும். காலத்தையும் இடத்தையும் கடந்த நிலையில் இயன்ற வகையில் எல்லாம், பிறருக்கு உள்ளத்தாலும், உரையாலும், செயலாலும் நன்மை செய்வதையே அறத்தின் பொது நிலையெனக் கொண்டு நம் முன்னோர்கள் ஒழுகினர்.

பண்டைத் தமிழ்ச் சான்றோர் கண்ட வாழ்க்கை நெறியாகிய அறத்தின் வித்து, பழக்க வழக்கங்களேயாகும். அதிலிருந்து நீதியெனும் முளைதோன்றி, கடமையுணர்வெனும் தளிர்விட்டு, ஒழுக்கமெனும் மரமாக வளர்ந்து, ஈகை, கொடையெனும் கிளைகளுடன் தழைத்து அறமெனும் வண்ணமலர் மலர்ந்துள்ளதை நாம் காணுகின்றோம்.

# சுந்தரரின் திருத்தொண்டத்தொகை

*ச.மங்கையர்க்கரசி*
சிதம்பரம்

## முன்னுரை

கயிலையில் சிவன் தன்னழகைக் கண்ணாடியில் பார்க்க, அதிலிருந்த அழகிய உருவத்தை, "சுந்தரா வா!", என அழைத்தார். சுந்தரர் தோன்றியதும். அவரைச் சிவபெருமான் விபூதி எடுத்துத் தரும் அணுக்கத் தொண்டராகப் பணித்தார். சுந்தரரும் சிவத்தொண்டைச் சிறப்பாகச் செய்து வந்தார்.

## கயிலை வாழ்க்கை

உமாதேவியாரின் தோழிகள் அநிந்திதை, கமலினி இருவரும் பூக்கொய்யச் சென்றபோது சுந்தரர் பார்த்துத் தன் மனத்தை அவர்கள்பால் செலுத்தினார். கயிலை எத்தகைய சிறப்பான இடம். இங்கு சிவன் தன் தவத்தைக் கலைக்க முயன்றதற்காகக் காமனையே தீயிலிட்ட இடம். இங்குத் தவறான சிந்தனைகள் தோன்றாது. ஆனால் சுந்தரர் அப்பெண்களைப் பார்த்தது, தென்திசை மக்கள் செய்த புண்ணியம். அவர்களுக்குத் திருமுறையும், திருத்தொண்டத்தொகை பெறவுமே அப்பெண்கள்பால் சுந்தரர் பார்வை சென்றது என்பர்.

*"மாதவம் செய் தென்திசை வாழ்ந்திடத்*
*தீதிலாத் திருத்தொண்டத்தொகை தரப்*
*பொதுவார் அவர்மேல் மனம் போக்கிடக்*
*காதல் மாதருங் காட்சியில் கண்ணினார்"*
(பெரியபுராணம், திருமலைச் சிறப்பு. பாடல் 25)

எனச் சேக்கிழார் பாடுகின்றார். சிவபெருமான் சுந்தரரை அழைத்து "நீ மாதர் மேல் மனம் செலுத்தினாய்! பூவுலகில் சென்று வாழ்ந்து விட்டுப் பிறகு வா!" என அனுப்பினார்.

## திரு அவதாரம்

தமிழகத்தில் திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூர் என்னும் ஊரில், சடையனார்க்கும், இசை ஞானியார்க்கும் பிறந்து "நம்பி ஆரூரர்" என்ற பெயரில் சுந்தரர் வளர்ந்தார். அவரழகைக் கண்ட மன்னன் நரசிங்க முனையரையர் அவரைத் தம் வளர்ப்பு மைந்தனாகக் கொண்டு சென்று வளர்த்து வந்தார். அவருக்குத் திருமணம் செய்யப் புத்தூர் சடசங்கவி சிவாச்சாரியர் மகளைப் பேசி முடித்தனர்.

## தடுத்தாட் கொள்ளல்

சுந்தரர் திருமணத்தன்று, முதியவர் ஒருவர் "சுந்தரர் தமக்கு அடிமை" என வாதிட்டார். முதியவரின் ஊரான திருவெண்ணெய் நல்லூர் சென்று, பெரியோர்கள் கூடி வழக்கு மன்றத்தில் ஆலோசித்தனர். சுந்தரர் இவரைப் "பித்தன்" என வாதிட்டார். ஆனால் முதியவர் ஓலையொன்றைக் காட்டி, "இவர் பாட்டன் எனக்கு அடிமை ஓலை தந்துள்ளார்" எனக் கூறினார். வழக்கில் சுந்தரர் தோற்று, முதியவர் வென்றார். பின்பு முதியவர் சுந்தரரை அழைத்துக் கொண்டு, கோயிலில் சென்று மறைந்தார். சுந்தரர் தேட, சிவபெருமான் அப்போது அவரைத் தடுத்தாட் கொண்டார். "எவ்வாறு உன்னைப் பாடிப் பணிவேன்," எனச் சுந்தரர் மனமுருக, சிவன், "என்னைப் பித்தன் என்றாயே அதைக் கொண்டே பாடுக" என்றார். சுந்தரரும்,

*"பித்தா பிறை சூடி பெரு*
*மானேஅரு ளாளா*
*எத்தால்மற வாதே நினைக்*
*கின்றேன் மனத்(து) உன்னை*
*வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்*
*நல்லூர் அருட் டுறையுள்*
*அத்தாஉனக் காளாய்இனி*
*அல்லேன்எனல் ஆமே!"* (ஏழாந்திருமுறை, பாடல்-1)

என்று பாடிப்பணிந்தார். இப்பாடலின் பண் இந்தளம் என்பதாகும்.

## திருவாரூர் வாழ்க்கை

சுந்தரர் பல்வேறு திருத்தலங்களைத் தரிசித்துத் திருவாரூர் வந்தார். தியாகேசப் பெருமானை வணங்கிப் பரவையாரை மணந்து சிவனருட்கடலில் திளைத்தார். அங்கிருக்கும் தேவாசிரிய மண்டபத்தில் கூடி இருந்த அடியவர்களைக் கண்டு, "அடியவருக்கு அடியார் ஆதல் எந்நாளோ" என மனத்துள் எண்ணியவாறே தியாகேசப் பெருமானை வணங்கினார். சுந்தரர் பெருமையை மீண்டும் உலகறியச் செய்ய ஈசன் திருவுள்ளம் பூண்டார்.

## தொகையின் காரணம்

திருஞானசம்பந்தர்க்கு முற்பட்ட காலத்தோர் 9 பேர். சம்பந்தர் காலத்தவர் 12 பேர். சுந்தரர் காலத்தவர் 13 பேர். இன்ன காலம் எனக் குறிப்பிட முடியாதோர் 29 பேர். இவர்கள் அனைவரையும் பட்டியலிட்டுக் காட்டிக் கூறியது சுந்தரர். நாயன்மார்கள் யார்? யார்? என்ற பட்டியல் எழுதவும், பெரியபுராணம் முழுமை பெறவும் சுந்தரர் எழுதிய "திருத்தொண்டத்தொகையே" காரணம் ஆகும். இதற்குமுன் அடியவர்கள் பெயர்ப்பட்டியல் இல்லையெனலாம். சேக்கிழாரின் பெரியபுராணம் கயிலையில் தொடங்கி கயிலையில் முடிவது போலச் சுந்தரர் வாழ்வும் கயிலையில் தொடங்கி கயிலையில் முடிகிறது.

## அடியெடுத்துக் கொடுத்தல்

சிவபெருமான் மீண்டும் ஒரு முறை சுந்தரருக்குப் பாட அடியெடுத்துக் கொடுத்தார். அடியவர் பெருமையை உலகோர் உணரத் திருவாரூரில் தியாகேசன், தில்லையை முதல் அடியாய் எடுத்துக் கொடுக்கிறார். திருவாரூர் மண் தலம். தில்லை என்பது ஆகாயத்தலம். மண் தொடங்கி விண்வரையுள்ள அடியவர் பெருமையைப் பாட உதவினார். தில்லை பல்வேறு சிறப்புக்களை உடைய தலமாகும். சுந்தரர் இறைவன் அடியெடுத்துக் கொடுக்க,

*"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்*
*திருநீல கண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்*
*இல்லையே என்னாத இயற்கைக்கும் அடியேன்*
*இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்*
*வெல்லுமா மிகவல்ல மெய்ப் பொருளுக்கு அடியேன்*
*விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்*
*அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்*
*ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே"*

(ஏழாந்திருமுறை, பா.63)

எனப்பாடிப் பணிந்தார். பதினோரு பாடல்களைக் கொண்ட இத்திருத்தொண்டத் தொகையின் பண் கொல்லிக் கௌவாணம் என்பதாகும்.

**முடிவுரை**

சுந்தரர் பற்றியும் அவர் பாடிய திருத்தொண்டத் தொகை பற்றியும் சுட்டப்பெற்ற செய்திகளினால் நாயன்மார்களின் பெயர்களும், அவர்கள் தம் பெருமையும் தெரியவருகிறது. மேலும் பெரியபுராணம் எழுதக் காரணமாய் அமைந்தது இத்திருத்தொண்டத்தொகை என்பதும் தெரிய வருகிறது. இதனால் இறைவன் அருளும், அடியவர் மாண்பும், சுந்தரர் பெருமையும் நம்மால் உணர முடிகிறது.

# தமிழ்ச் சொல் தகவற்பா

*புலவர் சி.பாண்டுரங்கன், ஆம்பூர்*

*போன்சாய் என்பது குறுமரம் தான்!*
*ஜங்ஷன் பாதை சந்திப்பாம் !*
*பேன்தான், விழைஞன்! கோல்டு செம்பொன்!*
*கூரியர் போஸ்ட்தான் தூதஞ்சல்!*
*சிடிதான் மாநகர், சுனாமியெனில்*
*ஆழிப் பேரலை, டிராம்வண்டி*
*விடைபெறி னும், குறு இருப்பூர்தி!*
*ஹைவே தமிழில் நெடுஞ்சாலை!*
*சப்வே குகைவழி, பிரிட்ஜ்பாலம்,*
*பாஸ்போர்ட் கடவுச் சீட்டாகும்,*
*விசா, அயல் நாட்டு நுழைவிசைவு*
*வைஸ்வெர் சா, அருத் தாபத்தி!*
*வாக்மேன் செவிஒலி, மிரர்ஆடி,*
*டிராவல்ஸ் பஸ்தான் சொகுசுந்து!*
*மேக்கப் புனைவு, லேன்சந்து!*
*ஏர்கூ லர்தான் புனல்விசிறி!*
*ஏர்கன் டிஷன், செய் தட்பவெப்பம்!*
*ஜென்டில் மேன் எனின் சான்றோன் தான்!*
*பேர்,கட் டணம்!பே, சம்பளமாம்!*
*போர்ஸ், படை! பைபாஸ், புறவழியாம்!*
*பார்சல், கட்டு, லிமிட்மட்டு,*
*பெய்ன் வலி, லைட்ஒளி, சார்அய்யா!*
*வார்-போர், பெலன்ஸ், இருப்பாகும்!*
*வாஷ், துவை, பிலாட் எது? அடுக்குமாடி!*
*வாக்-நடை, ஜாகிங் குதி ஓட்டம்!*
*ஓவர் வெயிட்மீ எடைஎன்க!*
*டேக், எடு, டயட்எனின் மருந்துணவு!*
*டிகிரி பாகை, போர்துளைப்பே!*
*ஸ்கேன் உள்படம், எக்ஸ்ரேதான்*
*கதிர்ப்படம்! லேப்எது? ஆய்வகமே!*
*ஸ்கேல் அளவை! சடன் பிரேக்தான்*
*அடர்தடை! நம் தமிழ் தென்றல் நேர்!*

# விருந்து

**ஆறுவிரல் ஐம்பொறி**
வீரசோழபுரம்

வந்தாரை வரவேற்று வாழவைக்கும் தமிழ்நாடு என்ற தொடரின் வழி தமிழகத்தில் விருந்தோம்புதல் இன்றிமையாப் பண்பாகப் போற்றப்பட்டு வந்தமை தெளிவாகிறது.

*நற்றமிழர் சேர்த்தபுகழ்*
*ஞாலத்தில் என்னவெனில்*
*உற்ற விருந்தை*
*உயிரென்று பெற்றுவத்தல்*

என்ற புரட்சிக்கவியின் பாடலின் வழி தமிழர்கள் விருந்தினரை உயிராகக் கருதினர் என்பது விளக்கமுறுகிறது.

*கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்*
*மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்*
*விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்*
*பிறவுமன்ன கிழவோள் மாண்புகள்*

-தொல்காப்பியம் -கற்பியல் -11

இந்நூற்பாவின் வழி இல்லறத்தை இனிதே நடத்தும் இல்லாளின் (கிழவோளின்) கற்பு, அன்பு, ஒழுக்கம், பொறை, நிறை, சுற்றம் ஓம்புதல் ஆகிய ஆறு மாண்புகள் விருந்து புறந்தருதலுக்கு இணையாக எண்ணப்பட்டதை அறியப்பெறுகிறது. இதனாலும் விருந்தின் இன்றியமையாமை துலங்குகிறது.

தலைவனும், தலைவியும் ஊடல் கொண்ட போது அவ்வூடலைத் தணிக்கும் வாயில்களாகப் பன்னிருவரைத் தொல்காப்பியர் நவின்றுள்ளார். இப்பன்னிருவருள் விருந்தினரும் ஒருவராவார்.

*தோழி தாயே பார்ப்பான் பாங்கன்*
*பாணன் பாட்டி இளையர் விருந்தினர்*

*கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்*
*யாத்த சிறப்பபின் வாயில்கள் என்ப*

-தொல்காப்பியம் - கற்பியல் -191

தலைவன் தலைவியின் ஊடலின் போது விருந்துவரின் இருவரும் ஊடல் தணிந்து விருந்தினரை உபசரிக்கும் பணிவிடைகள் செய்வதில் கருத்தைச் செலுத்துவர். எனவே விருந்தினர் ஊடல் தணிக்கும் வாயில்களாக அமைபவர்களுள் ஒருவராயினர். ஈண்டும் விருந்தோம்புதலின் இன்றியமையாமை புலப்படுகிறது.

விருந்தினரைப் பேணும் ஐந்து பணிவிடைகளைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான ஆசாரக் கோவை செய்யுள் வடிவில் சுட்டுகிறது. அவை 1. முறுவல் 2. இனிதுரை 3. கால்நீர் 4. உட்கார மணை இடல் 5. படுப்பதற்குப் பாயளித்தல் ஆகும்.

விருந்தினரைப் பேணும் ஒன்பது பணிவிடைகளைச் செய்யுள் வடிவில் விவேக சிந்நாமணி விளம்புகிறது. அவை 1. வியத்தல் 2. நல்மொழி உரைத்தல் 3. திருந்துற நோக்குதல் 4. வருகென உரைத்தல் 5. எழுந்து நிற்றல் 6. மகிழ்வன செப்பல் 7. அருகுற இருத்தல் 8. போமெனில் பின் செல்லுதல் (சிறிது தூரம் உடன் சென்று வழி அனுப்புதல்) 9. முகமன் வழங்கல் ஆகும்.

விருந்தினரைப் பேணும் பல பணிவிடைகளைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பகர்ந்துள்ளார். அவற்றுள் சில பணிவிடைகளை இங்கே காணலாம். 1. கண்கள் உவத்தல் 2. வருக அம்ம வருக ஐய என்று வரவேற்றல் 3. விருந்தினரின் கைகளை அன்புடன் பற்றிக்கொள்ளுதல். 4. முகம் அன்றலர்ந்த செந்தாமரையாதல். 5. பெட்டி, படுக்கைகளை அறைக்குள் அமைத்தல். 6. புறந்தூய்மைக்குத் தண்ணீர் தருதல். 7. உட்கார இருக்கை (நாற்காலி) அளித்தல். 8. படித்தின்புற நூல்கள், செய்தித் தாள்கள் நல்குதல். 9. விருந்தினரின் தேவை, வழக்கமறிந்து சேவை செய்தல். 10. உணவிடும் போது தண்ணீர், வெந்நீர் தனித்தனியே வைத்தல். 11. தக்கபடி கேட்டும் குறிப்பறிந்தும், கெஞ்சியும், மிஞ்சியும் தாய்போல் உணவூட்டுதல். 12. விக்குவதை முன்னறிந்து நீரருந்த நினைவூட்டுதல். 13. உண்டு விருந்தினர் எழுமுன் கைக்கு நீர் அளித்தல். 14. கையின் ஈரம் துடைக்க துவைத்த துகிலை அளித்தல். 15. விசிறி வீசுதல். இவை மட்டுமல்லாமல் மேலும் பல பணிவிடைகளைக் குடும்ப விளக்கு -இரண்டாம் பகுதி-விருந்தோம்பலில் கவிதை வடிவில் பாரதிதாசன் பகர்ந்துள்ளார்.

இவற்றை நோக்குழி அக்காலத்தில் வீட்டில் உள்ளோரை விட விருந்தினர்க்கே முதலிடம் அளித்தனர் என்பதை உணர முடிகிறது. அக்காலத்தில் மக்கள், உறவினர்களையும், நண்பர்களையும் தெரிந்தவர்களையும் விருந்தினர் என்று! கூறவில்லை. மாறாக முன் பின் தெரியாத புதியவராக வந்திருக்கும் ஒருவரையே விருந்தினர் என்று கூறினர். அதனால்தான். விருந்து என்ற சொல்லுக்குப் புதுமை என்று பொருள் கூறினர். விருந்தினர்-புதியவர். தொல்காப்பியர், செய்யுள் வகைகளுள் விருந்து என்னும் ஒரு வகையைக் கூறியுள்ளார்.

*விருந்தே தானும் புதுவது புனைந்த*
*யாப்பின் மேற்றே* - தொல்காப்பியம் செய்யுளியல் -231.

இந்நூற்பாவின் வழி விருந்து என்ற சொல் புதுமையைக் குறிக்கிறது.

பிறர் நலம் பேணும் அக்கால வழக்கம் சிறிது சிறிதாகக் குறைந்து தன்னலம் மிகுந்து இன்று உறவினர்களையும், நண்பர்களையும், அறிந்தவர்களையும் விருந்தினர் என்று கூறும் வழக்கம் தோன்றிவிட்டது. இதனால் விருந்து என்ற சொல்லுக்குரிய புதுமை என்ற பொருளும் மறைந்துவிட்டது. இன்று உணவளித்தல் மட்டுமே விருந்தோம்பலாகக் கருதப்படுகிறது. உணவளித்தல் கூட உள்ளன்போடு செய்யப்படுவதில்லை. விருந்தோம்பல சிறுகச் சிறுக மறைந்து கொண்டிருக்கிறது.

இந்நிலை நீங்கும் நாள் எந்நாளோ? விருந்தினருக்குச் செய்யும் அனைத்துப் பணிவிடைகளும் விருந்தோம்பலில் இடம் பெறும் நாள் எந்நாளோ? முன் பின் அறியாதாரையும் விருந்தினராகக் கருதும் நாள் எந்நாளோ ? அனைவரும் முறையாக விருந்தோம்பும் நாள் எந்நாளோ ?

*இட்டுப்பார் உண்டவர்கள்*
*இன்புற் றிருக்கையிலே*
*தொட்டுப்பார் உன்நெஞ்சை*
*தோன்று மின்பம்*

என்று புரட்சிக்கவி புகலும் பேரின்பத்தைப் பெறும் நாள் விரைவில் வரவேண்டும் என்பதே நம் விழைவாகும்.

# பசுவே மேல்

*கவிவேந்தர் கா. வேழவேந்தன்*

விடிந்துவிட்ட இளங்காலை; படுக்கைவிட்டே எழுந்தேன்;
வீதியிலே காலார உலவிவர நடந்தேன்.
நெடுந்தொலைவில் இருந்துவந்த வெளியூரார் ஒருவர்,
நின்றிருந்த நண்பரிடம் ஒரு சீட்டைக் காட்டி
"இடம்செல்ல 'அட்ரஸ் என்ன?" எனக்கேட்டார்; நண்பர்
"இப்படியே 'ரைட்' சென்று, 'லெப்டினிலே திரும்பி,
உடன் 'ஸ்ட்ரெயிட்டாய் நீர்நடந்தால் 'லைட்போஸ்ட்டும் தெரியும்;
உங்கள் 'அவுஸ்' ஆப்போசிட் !" எனச் சொன்னார்; நடந்தேன்.

திரும்பஎன்றன் வீடடைந்தேன். பக்கத்து வீட்டின்
சிறுவன் அவன் பள்ளிசெல்ல ஆயத்த மானான்;
"ஒரு 'மேட்டர், டாடி' ! இன்றே ' ஃபீஸ்' கட்ட 'லாஸ்ட்டேட்;
'ஒன் அன்ரட்' கொடுங்கள் !" என்றான், "ஒ, கே, சன் !" என்றார்.
திருமகளின் மணம்பற்றி அவர்மனைவி சொன்னாள்;
'த்ரீவீக்ஸ்'தான்; ' 'டைம் இல்லை; 'இன்விடேஷன்' எல்லாம்
இருக்கின்ற 'ரிலேஷனு'க்கு 'அர்ஜெண்ட்' டாய்க் கொடுங்கள்;
ஏன் 'டல்'லாய் இருக்கின்றீர்?" எனச்சண்டை யிட்டாள் !

பக்கத்து வீட்டுக்குப் பால்கறந்தே கொடுக்கப்
பசுவோடும் கன்றோடும் பால்காரன் வந்தான் !
சிக்கனமாய் அக்கன்றை எதிர்த்தூணில் கட்டி !
தீருமட்டும் பால்கறக்கத் தீவிரமாய் முயன்றான் !
திக்கற்ற சேய்க்கன்றோ தாய்ப்பசுவை நோக்கித்
தீனமுடன் 'அம்மா' வென் றே அலறக் கண்டேன் !
வக்கற்ற பசு அன்னை தன்மகவைப் பார்த்து,
வாயார 'அம்மா' வென் றேகதறக் கேட்டேன்

அடடாவோ ! 'தமிழ்த் தாயி'ன் வயிற்றினிலே பிறந்து,
அன்றாடம் 'தமிழ்ப்பா'லை அருந்தியிங்கே வளர்ந்தும்,
நடமாடும் 'தமிழ்மண்'ணில் 'தாய்த்தமி'ழை மறந்து,
நன்றிகெட்ட தமிழனிங்கே 'தேம்ஸ்மொழி'யில் பேச
உடன்பட்டான்; அதுதானே உயர்வென்றான் ! நல்ல
ஓசையுடன் 'அம்மா'வென் றேதமிழில் பேசி
நடமாடும் பசுநின்ற திசைநோக்கித் தொழுதேன்.
"நம்தமிழன் திசைமாற்ற வழியிலையா?"என்றேன்.

# தமிழ் - இயற்கையுண்மைச் சிறப்பில் மொழி

*திருமிகு. ப. வேல்முருகன்*

**முன்னுரை**

அன்பையும், இரக்கவுணர்வையும் அனைத்துயிர்கட்குமற்றுமின்றி உயிரற்ற, பொருட்கண்மீது போற்றும் மொழிகளைத் தேடின் உலகின் வேறெந்த மொழிகளிலும் காணக்கிடைக்காதளவு பாசுரங்கள் நிரம்பிய மொழியாகத் தமிழ்மொழி விளங்குகின்றது.

வடமொழி, இலத்தீன், கிரீக்கு முதலியன போலத் தமிழ் மொழியும் 'உயர்தனிச்செம்மொழி' ஆவதைக் காட்டிட ஆய்வுகள் பெருமளவில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இத்தருணத்தில் கால்டுவெல் பெருமகனார் மொழியாய்வு செய்வதற்கு முன்பே தமிழ் மொழியாய்வைத் தொடங்கி வைத்தவர் வடலூர் இராமலிங்க அடிகள் என்பதை அறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

தொல்காப்பியர். திருவள்ளுவர் போன்றோர்க்குப் பின் நீண்ட இடைவெளியை முழுமை செய்து அருட்கொடையாய்த் தமிழுக்குக் கிடைத்தவர் வள்ளலார். இதுவரை எவருங்கூறாத தமிழ்மொழியின் உண்மைச் சிறப்பை வெளிப்படுத்தியவர். இவ்வகையில் வள்ளலாரின் தமிழ்மொழி ஆய்வைப் பற்றி இக்கட்டுரை நோக்குகிறது.

**செம்மொழி இலக்கணம்**

*''திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய*
*தாய்மொழி புகழ்' செம்மொழி' யாம் இலக்கணம்''*

என்று செம்மொழிக்கு இலக்கணம் வகுக்கின்றார் பரிதிமாற் கலைஞர் வி. கோ.சூரியநாராயணசாத்திரியார்.

இவ்விலக்கணம் பொருந்திய மொழிகள் எவையென்று ஆய்ந்தறிந்து வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்ற உலக

மொழியியலாளர்கட்கு மேலும் ஓர் ஆய்வைத் தொடங்கத் தூண்டுகின்றார் இராமலிங்க அடிகள்.

## தமிழ்- இயற்கையுண்மைச் சிறப்பியல் மொழி

உலக மொழிக் கூட்டங்களில் 'தமிழ் இயற்கையுண்மைச் சிறப்பியல் மொழி' என்பதே வள்ளலாரின் மொழிக் கொள்கை. தமிழைப் போன்று இச்சிறப்புத் தன்மை கொண்ட மொழிகள் உள்ளனவா? எனக் கண்டறிய வேண்டுவது இன்று அவசியமாகிறது. தமிழ் இயற்கையுண்மைச் சிறப்பியல் மொழி என்பதற்கு வள்ளலார் நிறுவும் கூறுகளை நோக்குவம்.

இராமலிங்கர் சென்னையிலிருந்த போது தவத்திரு சங்கராச்சாரிய சாமிகளைச் சந்தித்து அளவளாயினார். அப்பொழுது சமஸ்கிருதமே 'மாத்ரு பாஷை' என்று சுவாமிகள் கூற அதனைத் தழுவி, 'ஆயின் தமிழ் பித்ருபாஷை' என்று இராமலிங்க அடிகள் வலியிறுத்தினார். அந்தச் சொல்லாடலின் போது அடிகள், 'தமிழ்' என்னும் பெயருக்குத் தந்த விளக்கவுரை அச்சு வடிவில் வெளிவந்துள்ளது.

"அவ்வுரை உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை என்னும் திங்களிதழில் 21.08.1907இல் 'தமிழ் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்டது.' பின்னர் சித்தாந்தம் 1913 ஜூலை இதழில் 'தமிழ் இராமலிங்க சுவாமி யெழுதியது' என அச்சிடப்பட்டுள்ளது. நுண்ணுணர்வும், பேரறிவும், சிறப்பாற்றலும் பொருந்திய அருட்டன்மையுடன் கூடியதாக அவ்வுரை விளங்குவதை அறிஞர்கள் அறிவர். அதில் 'தமிழ்' என்ற சொல்லின் எழுத்துகளுக்கு அவர் கூறும் விளக்கம்.

தமிழ் -த் + அ + ம் + இ + ழ் - ஐந்து அலகுடையது

த், ம், ழ், -ஜடசித் கலை.

அ, இ - சித்கலை

அ -பதிநிலை

இ -ஜீவசித் கலை

### தமிழ் - பத்வுரை

த் -இயற்கை உண்மைக் கட்டளை

அ -இயற்கை உண்மைப் பரிபூரணப் பொருள்

த -இயற்கை உண்மைப் பரிபூரணப் பொருளின் உண்மைக் கட்டளை.

ம் - ஆன்மாதாரம்

இ -விஞ்ஞானகலர்

மி - இயற்கையின்பத்தை அனுபவிப்பவர்

ழ் -இயற்கையுண்மைத் தனித்தலைமைப் பெருமை சிறப்பியல் ஒலி

### தமிழ் - சொற்பொருள் விளக்கம்

பலவாறு விளக்கிச் செல்லும் அடிகள், இறுதியில் தமிழ் எனும் சொல்லுக்கு மிகச்சுருக்கமாகச் சொற்பொருள் தருகிறார்.

“உரைகூறிய போந்த சுத்த சித்தாந்த ஆரிட ரீதி முப்பதவுரைப் பொழிப்பு : மருளியற்கை மல இருளைப் பரிபாக சத்தியால் அருளொளியாக்கி, அதற்குள்ளீடான சிதாத்ம சிற்கலாசத்தியென்னும் சுத்த ஆன்மாவானது தகர ககன நடன அருட்பெருஞ்ஜோதி யென்னுஞ் சுத்த சிவானந்த பூரணத்தை சுத்த மோனாதீத வியலால் அனுபவிக்கும் இயற்கையுண்மையே தமிழ் என்னும் சொற்பொருள் சுட்டினவாறு காண்க. இதன் கருத்து யாதெனில் தமிழ் பாஷையே அதி சுலபமாகச் சுத்த சிவாநுபூதியைக் கொடுக்கு மென்பதாகும்”

இவ்வுரை மொழியியல் நுட்பமும், தத்துவ நுட்பமும் கொண்டதாக அமைந்துள்ள காரணத்தால் பெரிய அளவில் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ளதை மொழியியல் அறிஞர்கள் அறிவர். எனினும், இயற்கை உண்மையை விளக்கி, இயற்கையின்பத்தை அனுபவிக்கச் செய்யும் இயற்கையுண்மையின் தனித் தலைமைப் பெருமைச் சிறப்பியல் ஒலி அணுக்கூட்டமே தமிழ் என்று ஒருவாறு உய்ந்துணரலாம்.

**தமிழ் – ஆண்மைமொழி**

தமிழ் உலகிலுள்ள அனைத்து மொழிகளின் ஒலிகளையும் தன்னகத்தே கொண்டு ஆளும் ஆளுமை கொண்ட மொழியாக இருப்பதால் தந்தைமொழி - தலைமை மொழி என்று அடிகள் விளக்கிச் செல்வதைப் பெரிய அளவிலான ஆய்வை மேற்கொண்டு மொழியறிஞர்கள் ஆராய வேண்டியுள்ளதை அறியலாம்.

**எளியோர்க்கு ஏற்றந்தரும் மொழி**

எல்லார்க்குங் கற்றார்க்கும் அழியாத இயற்கையின்பத்தை எளிதாகப் பெற்றுத் தரும் மொழியாகத் தமிழ் விளங்குகின்றது என்பதே வள்ளலாரின் முடிந்த முடிபாகும். இதனை,

"கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும் ஒலி யிலேசாயும் கூட்டெடன்னுஞ் சந்தி அதிசுலபமாயும் கவிசெய்யவும் மிக நேர்மையாகவும் அக்ஷர ஆரவாரம் சொல்லாடம்பரம் முதலிய பெண்மை அலங்காரமின்றி எப்பாஷையின் தன் பாஷையுள்ளடக்கி ஆளுகையால் ஆண்டன்மையைப் பொருந்தியதுமான தற்பாஷைக்கே........." என்ற விளக்கத்திலிருந்து அறிய முடிகிறது.

தமிழைப் படிப்பவரும், படிக்க பக்கநின்று கேட்பவரும் அழியாத இயற்கையின்பத்தைப் பெறுவர் என்பதற்கு வீரமாமுனிவர், ஜி. யூ. போப் போன்ற பிறமொழியாளர்களே சான்றாகின்றனர்.

அஃறிணையும் இன்பம் பெறும் இயற்கையுண்மைச் சிறப்பியல் மொழியாம் தமிழ்ப் பாடல்களைக் கேட்கும். அஃறிணை உயிர்கள் கூட உண்மையறிவைப் பெற நாட்டமுறும். அழியாயின்பத்தைப் பெறும் என்பதற்குக் கீழ்க்கண்ட அடிகளாரின் பாடலே சான்றாக அமைகிறது.

*"வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்*
*கேட்டபொழு தங்கிருந்த கீழ்பறவைச் சாதிகளும்*

*வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான*
*நாட்டமுறு என்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே''*
(திருவருட்பா - 3266)

**வள்ளலாரின் தமிழ்ப்பற்று**

எவ்விதப் பற்றும் மனதில் பற்றாவண்ணம் அருள் வேண்டிய வள்ளலார், தமிழ் மொழியின்பால் தன்னைப் பற்றச் செய்ததற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துபவராகிறார் என்பதனை,

''இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெருமறைப்பையும் போதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல ஒட்டாது பயிலுதற்கு மறிதற்கும் மிகவு மிலேசுடையதாய் சாகாக் கல்வியை இலேசி லறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென்மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டுக்ளைப் பாடுவித்தருளினீர்'' என்ற சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பப் பகுதியிலிருந்து அறிய முடிகிறது.

**முடிவுரை**

இவ்வகையில் இராமலிங்க அடிகளின் தமிழ்மொழியாய்வும், தமிழின் சிறப்பும் தெளிவாகப் புலப்படுகிறது. உலக மொழியாய்வாளர்கள், 'தமிழ் இயற்கையுண்மைச் சிறப்பியல்மொழி' என்ற அடிகளாரின் மொழியாய்வைக் கருதுகோளாகக் கொண்டு ஆய்வு செய்யின் மொழி பற்றிய புரியாத புதிர்களுக்கு விடை கிடைக்குமென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

# பொய்கையார்

*பத்திராதிபர் மு.இராகவையங்கார்*

பொய்கையார் என்னும் பெயர் திருமாலடியாராகிய ஆழ்வார் பதின்மருள் முன்னவராகிய பெரியா ரொருவருக்கும் உரியதாக வழங்கப்படுகின்றது. அவருள் அடியாராகிய பொய்கையார் அருளிச்செய்தது வெண்பாவில் 'முதற் றிருவந்தாதி' என்னும் நூலாகும். அது திராவிட வேதமாகிய நாலாயிரப்பிரபந்தத்தில் 'இயற்பா' என்னும் பகுதியில் அடங்கியுள்ளது. இனிப் புலவராகிய பொய்கையார் அருளியன: பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றாகிய களவழிநாற்பதும், புறநானூற்றினும் பிறவற்றினும் ஆண்டாண்டுக் காணப்படும் சிற்சில செய்யுட்களுமாம். மேலே காட்டிய அவ்விருவர்க்கன்றி வேறெவர்க்கும் இப்பெயர் வழங்குவதாகக் காணப்படவில்லை.

அடியாராகிய பொய்கையாழ்வாரது வைபவம் ''குருபரம்பரை'' என்னும் சம்பிரதாய நூலிலேயே கூடப்படுகின்றது. அவர் துவாபரயுகத்திலே அவதரித்தாரென்பதும், அவர் காலத்திருந்தோர் பூதத்தாரும், பேயாழ்வாருமாவர் என்பது, ஆழ்வார்களெல்லாரினும் முற்பட்டவ ராதலாற் பொய்கை, பூதம், பேய் என்னுமூவர்க்கும் ''முதலாழ்வார்'' என்றொரு திருநாமம் உண்டென்பதும், பிறவும் அந்நூலால் அறியப்படுகின்றன. அவற்றுட் 'பொய்கையாழ்வார் அவதார காலம் துவாபரயுகம்' என்ற கொள்கையை இக்காலத்துச் சரிதவாராய்ச்சி செய்வார் பலரும் பூர்வீகர் செய்த கற்பனையென்றே கொண்டு பெரிதுங் கருத்து வேறுபடுவர்., அவர் கூறுவன எவ்வாறாயினும், அக்கொள்கை, பொய்கையாழ்வாரின் முற்பட்ட கால நிலையை உணர்த்திக் காட்டியே நிற்பதாகும். அன்றியும், ''விருந்தே தானும்'' என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரவுரைக்கண்ணே பேராசிரியர் ''புதுவது கிளந்த யாப்பின்மேற்றென்ற தென்னையெனின் : - புதிதாகத் தாம் வேண்டியவாற்றுறாற் பலசெய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது: அது முத்தொள்ளாயிரமும். பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க'' என்று கூறுதலால், பொய்கையார் அருளிய

திருவந்தாதி தொல்லையுரை யாசிரியரான் எடுத்துச் காட்டப்பட்ட பெருமைவாய்ந்தது என்பது விளங்குவதன்றி, பண்டைக்காலத்து நூலாகிய முத்தொள்ளாயிரத்தோடு உடனெண்ணப்பட்டமையாலும், செய்யுணடைப் போக்காலும் அதன் பழமை வலியுறுவதாகும். இது நிற்க. மற்றைப் புலவராகிய பொய்கையாரைக் குறித்து இனி ஆராய்வோம். இவர், சோழன் செங்கணன் சேரமான்கணைக்காலிரும்பொறையைக் கழுமரமென்னுமூரிற் போர்க்களத்து வெற்றி கொண்ட சிறப்பை விளக்கிக் "களவழி நாற்பது" என்னு நூலியற்றியிருத்தலால், அவ்வரசன் காலமும் அப்புலவர் காலமும் ஒன்றெனச் சொல்லாதே விளங்கும். இங்குக் காட்டிய செங்கணானது காலம் ஒருதலையாகத் துணியப்படவில்லை. ஆயினும் "தென்னிந்தியா சிலாசாதன ஆராய்ச்சிப் பத்திரிகை நான்காம் புத்தகத்திற் காணப்படும் யாவரு முன்மையென்று கருதற்குரிய சோழவம்சாவளியொன்றில் ஒருவனே செங்கணான் காணப்படுகின்றன் எனவும், அவன் பெயர் முதலாங் கரிகாற் சோழனுக்குப் பின்னும், கி.பி. 890 ஆம் ஆண்டிற் பட்டமெய்திய விஜயாலயச் சோழனுக்கு முன்னுங் கூறப்பட்டுள்ளதெனவும், கரிகாலன் கி.பி.இரண்டாம் நூற்றண்டிற் செழித்து விளங்கினன் என்பது தெளியப்படுதலால், சோழன் செங்கணானும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டிற்கும் 6ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் இருந்தவனாதல் வேண்டுமெனவும் சரிதவாராய்ச்சி செய்யும் அறிஞர் கூறுவர். இக்கூற்றாலும், முற்கால நூல் என்று கருதப்படும் 'புறநாநூற்றில் ' அவ்வரசன் பெயரும் அப்புலவர் பெயருள் காணப்படுதலாலும் கரிகாற் சோழனுக்குச் சில தலைமுறைக்குப் பிற்பட்டு அவ்விருவரும் இருந்தன்ரென்றே கொள்ளலாம். இதனுற் புலவராகிய பொய்கையாரும் பண்டைக்காலத்தினரென்பது தெளிவாம்.

இனி, முற்காலத்தினரென்றறியப்பட்ட அவ்விரு பொய்கையாருடைய குணவிசேடங்களையும் ஆராயலுறின், முற்கூறியவர் இறைவனது பொருள்சேர் புகழ்பாடும் புலவராகவும், பிற்கூறியவர் நாக்கொண்டு மானிடம்பாடும் புலவராகவும் காணப்படுவர். இங்குக் கூறிய இவ்விருவேறு குணங்களே, பொய்கையார் இருவர் என்ற கொள்கையைப் பலர் மனத்திலும் நெடுங்காலமாக அழுந்தச் செய்துவருகின்றன. இம்மனவழுத்தத்தாலேதான் பொய்கையார் ஒருவரா? இருவரா என்னும் ஐய ஆராய்ச்சியும் பெரும் பாலார்க்குள் நிகழாமற் போயிற்று. ஆனல் முற்கூறியவாறு பகுத்துக்கொண்டு அவ்விருவரும் ஒருவ ரல்லர் என்று கொள்ளுதலை உறுதிப்படுத்தியதற்கு வலியுடைய பிறிதொரு காரணங்காட்டல் அரிதாகும். அன்றியும், பட்டர்பிரான்,

திருமங்கைமன்னன் முதலாய ஆழ்வார்கள் தங்காலத்திருந்த அரசர் சிலரைத் திருப்பதிகங்களிற் புகழ்ந்து கூறியிருத்தலே அடியாராகிய பொய்கையாரே தங்காலத்துப் பெருந்தகை மன்னர் சிலரைப் புகழ்ந்து பாடினர் என்று கொள்ளின் இருவேறு பொய்கையாரைத் கற்பித்துக்கொள்ளுதற்குக் கூறுங்காரணங்கள் சிறிதும் பொருந்தாதனவாகும். சுருங்கச்சொல்லின், அபிமானமும், அஃதின்மையும் அங்ஙனமாய் கற்பனைச் சக்திக்கு முக்கிய காரணங்களாகத் தோன்றுகின்றன. இவ்வாற்றால் இருவராக மேலே காட்டிய பொய்கையாரை ஒருவராகவே துணிதற்கண்ணுங் குற்ற மில்லையென்பது தெரியலாம். ஆயினும், அங்ஙனந் துணிதற்கு முன் ஒருவராகக் கோடற்கு ஏற்புடைய பிற சாதனங்கள் உளவா என்று ஆராய்ச்சி செய்தல் இன்றியமையாதாகும்.

இதுகாறும் அச்சாகி வெளிவரப்பெறாத "யாப்பருங்கலவிருத்தி" என்னும் அரியபெரிய நூலே பொய்கையார் ஒருவரா: இருவரா? என்ற ஐயத்தை நீக்கி ஒருவாறு முடிவளித்தற்குப் பெருந் துணைக்கருவியாகின்றது. அந்நூலுரைக்கண்ணே பொய்கையாரது செய்யுட்கள் ஒருசில அங்கங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவ்விருத்தி நூலுடையாரது பழமையும் பெருமையும் பண்டைக்காலத்தனவும், அரியனவுமாகிய நூல்கள் பலவற்றை அவர் எடுத்தாட்சி புரிதலானும், உரைவிரிக்குந் திறமையாலும் நன்றுணரக் கிடக்கின்றன. அவ்வுரைகாரர் பொய்கையார் செய்யுட்களை எடுத்துக்காட்ட நேருமிடங்களிலெல்லாம் பெரிதும் பெருமைபாராட்டி "இது பொய்கை வாக்கு" "இது பொய்கையார் வாக்கு" என்றே கூறிப்போவர். அன்றியும், அவர், பொய்கையாரை ஏனைப்புலவரைப் போலக் கொள்ளாது, தெய்வத்தன்மை வாய்ந்த சேந்தமிழிருடி எனவும், அவர் செய்யுயெல்லாம் ஆரிடமாகுமெனவும், ஆதலின் அத்தகையோர் பாடல்கள் எவ்வாறாயினும் அவை போற்றத்தக்கன எனவும் குறிப்பிக்கின்றர். அவர் கூறுவன வருமாறு.

*"வரிசை பெரிதுடையார் கட்கலமுந் துய்யர்*
*புரிசை யொருசாரா ரம்பலமுந் தண்ணீருந்*
*தண்ணிலந்து வல்ல புரிசைக்குத்*
*தெற்கொற்றித் தோன்று நென்மலி யேனம்*
*பொற்கொற்றி புக்கிருக்கு மூர்" எனவும்,*

*"வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சண*
*னான்மாடக் கூடலிற் கல்விலிது*
*சோழ லுறந்தைக் கரும்பினிது தொண்டைமான்*
*கச்சியுட் காக்கை கரிது"* எனவும்,

*"கிடங்கிற் கிடங்கிற் கிடந்த கயலைத்*
*தங்கட் டடங்கட் டளிரியலார் கொல்லார் -கிடங்கில்*
*வளையாற் பொலிந்தகை வையெயிற்றுச் செவ்வா*
*யிளையாடன் கண்ணொக்கு மென்று"* எனவும்.

இத்தொடக்கத்துப் பொய்கையார் வாக்கும், குடமூக்கிற் பகவனார் செய்த வாசுதேவனார் சிந்தமும் எப்பாற்படுமோ வெனின்: -ஆரிடச் செய்யுள் எனப்படும். ஆரிடம் என்பது உலகியற் சொல்லிற் கோதிய உறுப்புகளின் மிக்குங் குறைந்துங் கிடப்பனவெனக் கொள்க. "வரிசை பெரிதுடையார்" என்பது மிக்கது: அல்லன மிக்குங் குறைந்தும் ஆற்றல் உடையோராயினோர்: அவர் இம்மை மறுமை முக்காலமுமுணர்ந்த இருடிகளெனக் கொள்க. என்னை? "உலகியற் சொல்லிற் கோதிய வளவையிற், குறையவும் விதப்பவுங் குறையாவாற்றல், இருடிகண் மொழிதலினாரிடமென்ப" மூவகைக் காலப் பண்புமுறையுணரும், ஆற்றல் சான்ற வருந்தவத்தோரே" என்றார் பாட்டியன் மரபுடையார். வட நூலுடையாரும் பிங்கல முதலாகிய சந்தோபிசிதிகளுள் விருத்தமிக்குங் குறைந்துங்கிடப்ப இருடிகளாற் சொல்லப் பட்டனவற்றை ஆரிடமென்பர்" எனக் கண்டுகொள்க.

இவ்வாறு கூறியதனால் அவ்விருத்தியுடையார் காலத்துக்கு முன்பே தெய்வத்தன்மையுடைய பெரியாராகப் பொய்கையார் கருதப்பட்டு வந்தா ரென்பது தெரிகின்றது. அப்பெருந்தகை முனிவர் வாக்காக மேற்குறிக்கப்பட்ட செய்யுட்களை நோக்கின், அங்ஙனம் அவை தெய்வத்தன்மை விளக்குவன வன்றி, வஞ்சி முதலாய நகரங்களின் தன்மைகளையும், அகப்பொருட் பகுதியையும் விஷயமாகக் கொண்டு நிற்கின்றமை இனிது விளங்கும். அவ்வாறே:-

*"ஆழி யழைப்பப் பகல்போ மிராவரிற்*
*றோழி துணையாத் துயர்தீர்வன் -றோழி*
*நறுமாலைத் தாராய் திரையவோ ஒ வென்பன்*
*சிறுமாலை சென்றடையும் போது".* எனவும்

*"அரிமல ராய்ந்தக னம்மா கடைசி*
*திருமுகமுந் திங்களுஞ் சேர்த்துத் தொகுமத்து*
*வையத்தும் வானத்துஞ் செல்லா தணங்காகி*
*யையத்து னின்ற தரவு"* எனவும்.

*''அவிழ்ந்த துணியசைக்கு மம்பலமுஞ் சிக்கு*
*மகிழ்திடுவார் முன் மலருங்-கவிழ்ந்து*
*நிழறுழா யானை ரெடுமான்றேர்க் கிள்ளி*
*கழறொழா மன்னவர்தங் கை'' எனவும்*

*'' பகலவன் செய் தூதிற் பண்பின்றி வந்தா*
*ரிகலினி னின்றார் வலியு -மிகலுடைய*
*நன்னயத்தோ டாயக்காற் சந்தியா நட்டாரா*
*மன்னனடை நட்டாருட் பேறு'' எனவும்*

இத்தொடக்கத்துள் சிற் சில பாடல்கள் ''பொய்கையார் வாக்கு'' என்ற குறிப்போடும் அவ்யாப்பருங்கலவிருத்தியிலே உள்ளன. இவையன்றி, யாப்பருங்கலக்காரிகை, உறுப்பியல், 7ஆம் செய்யுளுரைக்கண் பொய்கையார் பாடலாக,

*''அம்ம்பவள் வரிநெடுங்க ணாய்வஞ்சிக்*
*கொம்ம்பவள் கொடிமருங்குல் கோங்கி*
*னரும்ம் பவண்முலை யொக்குமே யொக்குங்*
*கரும்ம் பவள்வாயிற் சொல்'*

என்றொரு செய்யுளுங் காணப்படுகின்றது. மேலே கூறப்பட்டவற்றைக் கொண்டு பொய்கையாரது இருடித்தன்மையைக் குறித்தால், அவர் ஆழ்வார் பதின்மருள் முன்னவராகிய பொய்கைப்பிரான் என்றே ஊகிக்கலாம். அன்றி, அவர் பாடிய செய்யுட்களின் பொருளை ஆராய்ந்தால் களவழி முதலிய பாடிய பொய்கையார் என்று கருதற்கும் ஆதரவொன்றுங் காணப்படவில்லை. வேற்றுமைப்பட்ட குணங்கள் உண்மையால், இருவரே ஆண்டுக் கூறப்பட்டன ரெனின், இம்மை மறுமை முக்காலமுமுணர்ந்த இருடியின் வாக்கு என்று மேற்காட்டிய ''வஞ்சிவெளிய 'முதலாய செய்யுட்களால் அவ்வாறு இருடித்தன்மை விளங்குதலின்றிப் புலமைத்தன்மையொன்றே தெளியப்படுதலால் அது பொருந்தாதாகும். ஆகவே, இறைவனது பொருள்சேர் புகழ்பாடும் இருடிக்கன்மையும், ஏனைப்புலமைத்தன்மையும் பொய்கையாரொருவரே உடையராயினார் என்பது வெள்ளிடைமலை யென விளங்கிநிற்று. விளங்கவே, பொய்கை முனிவர் வஞ்சி முதலிய நகரங்களையும், கிள்ளி, திரையன், முதலிய அரசரையும் புகழ்ந்திருப்பதாக மேற்குறித்த செய்யுட்களே விளக்குதலின், அதனைக்கொண்டே, அம்முனிவராற், சோழன் செங்கணானும், சேரமான் கோக்கோதைமார்பனும் களவழியானும், புறநானூற்றிற் கண்ட செய்யுட்களாலும் புகழ்ந்து பாடப்பெற்ருர் என்றே எளிதின் உணர்ந்து கொள்ளலாம். ஈண்டுக் கூறிய அவ்விரு பெருவேந்தரும், பெருந்தகையாளராகிய அப்பொய்கைமுனிவராலும் புகழத்தக்க பெருமை வாய்ந்தவர் என்றே கொள்க. ஆழ்வார் பததின்மருள் ஒருவராய திருமங்கை மன்னன், திரு நறையூர்த் திருப்பதிகத்தில்,

*"கவ்வைமா களிறுந்தி வெண்ணியேற்ற .*
*கழன்மன்னர் மணிமுடிமேற் காகமேறத்*
*தெய்வவாள் வலங்கொண்ட சோழன்சேர்ந்த*
*திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"*

*"வெங்கண்மா களிறுந்தி வெண்ணியேற்ற*
*விளன்மன்னர் திறலழிய வெம்மாஅய்த்த*
*செங்கணான் கோச்சோழன் சேர்த்த கோயில்*
*திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே."*

*"மின்னாடு வேலேந்து விளைந்தவேளை*
*விண்ணேறக் தனிவேலுய்த் துலகமாண்ட*
*தென்னாடன் குடகொங்கண் சோழன்சோர்ந்த*
*திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"*

*"இருக்கிலங்கு திருமொழிவா யென்டோளீசற்*
*கெழின்மாட மெழுபதுசெய் துலகமாண்ட*
*திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்தகோயில்*
*திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"*

*"பாராள ரவரிவரென் றழுந்தையேற்ற*
*படைமன்னர் குலமிரியப் பரிமாவுய்த்த*
*தேராளன் கோச்சோழன் சேர்ந்தகோயில்*
*திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"*

என்றிவ்வாறு சோழன் செங்கணானைப் புகழ்ந்திருத்தலால், அவ்வரசனது தெய்வத்தன்மையும் பெருமையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணரத்தக்கன. இச்சிறப்பெல்லாம் ஏனையோராகிய சேரமான் கோக்கோதைக்கும் ஒக்குமென்பது இவ்வாற்றுற் களவழி நாற்பதும், புறநானூறு, யாப்பருங்கலவிருத்தி முதலியனற்றிற் கண்ட செய்யுட்களுந் தமிழிருடியாகிய பொய்கை முனிவரால் அருளிச் செய்யப்பட்டன வென்பது மலையிலக்காம்.

மேற்கூறியவாற்ருல் ஆற்றல் சான்ற அருந்தவவிருடி என்று தெளியப்பட்ட பொய்கை முனிவர், திருமாலடியாராகிய பொய்கையாழ்வார்தாமா? என்பது இனி ஆராயத்தக்கது. பொய்கையாழ்வார் அருளிச்செய்தது "திருவந்தாதி" எனப் போன்ற தென்றும், அது தொல்லையுரையாசிரியரான் மேற்கோள் காட்டப்பட்ட பழையதொரு நூலாமென்றும், மேலே சொல்லியிருக்கின்ரேம். இனி, யாப்பருங்கல விருத்தியில் 64ஆம் சூத்திரவுரைக்கண்ணே,

*"பாலன் றன்துருவா யேழுகுண்ட டாலிலையின்*
*மேலன்று நீகிடந்தாய் மெய்யென்ப - ராலன்று*
*வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ*
*சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு"*

*''எளிதி னிரண்டடியுங் காண்பதற்கு நெஞ்சே*
*தெளிவிற் றெளிந்துரைப்பன் செவ்வே - களியிற்*
*பொருந்தா விரணியனைக் கொல்லுற் றரியா*
*யிருந்தான் றிருநாம மெண்ணு''*

''இப்பொய்கையார் வாக்கினுள் முற்றியலுகரமீருய் வந்தன'' என்று தெய்வப் புலமைப் பொய்கை முனிவரதாக வேறிரண்டு செய்யுட்களும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இச்செய்யுட்களின் பொருளை ஆராய்வாரும் இவை, திருமால் விஷயமாக நிற்றலால், இவை பாடிய பொய்கை முனிவரைத் திருமாலடியவரென்றே முடிவு செய்துவிடலாம். ஆயினும் அம்முனிவர் பெருமான் பொய்கையாழ்வாரின் வேறல்லர் என்பது வலியுறுதல் வேண்டி. மேற்கூறிய பாடலிரண்டும், பொய்கையாழ்வார் அருளிய முதற்றிருவந்தாதியின் முறையே 69. 51 ஆம் பாசுரங்களெனவும் அதனுள் யாப்பருங்கலவிருத்தியுடையார் தெய்வத் தமிழிருடி எனக்கொண்டு பன்முறையும் மேற்கோள் புரிந்த பொய்கைமுனிவர் திருமால் அடியாராகிய ஆழ்வார் பதின்மருள் முன்னவராகிய பொய்கைப் பிரானே யாவரெனவும் விளங்கக் கூறிமுடிக்கின்ருேம்.

இதுகாறும் கூறிப் போந்தவாற்ருல், யாப்பருங்கலவிருத்தியில் ''இது பொய்கையார்வாக்கு'' என்று குறிக்கப்பட்ட பாடல்களும், புறநானூற்றில் கண்ட செய்யுட்களும், களவழியும் பொய்கையாழ்வார் அருளிச்செய்தனவென்பதூஉம், மதிநலமருளப்பெற்ற அவ்வாழ்வாரையே இம்மை மறுமை முக்காலமுமுணர்ந்த இருடி என அவ்விருத்தியுடையார் குறித்துப் போந்தாரன்பதூஉம், தமக்குச் சில நூற்ருண்டுக்கு முன்னிருந்த சோழன் செங்கணானைத் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியிற் பெரிதும் புகழ்ந் திருத்தலானே அவ்வரசன் தெய்வத்தன்மையுடையான் என்பது தெளியப்படுதலின், அது போலவே தங்காலத்திருந்த அப்பெருந்தகை மன்னனைப் பொய்கைப் பிரானே களவழிநாற்பதாற் புகழ்ந்து பாடினர் என்று கொள்ளற்கண் யாதோரிழுக்குமின்றென்பதூஉம், பிறவும் உய்த்துணர்ந்து கொள்க.

''திருவுடை மன்னரைக் காணிற்றிருமாலைக்கண்டதாக''ப் பாவிக்கும் குருகைப் பெருமானைப்போலப், பொய்கைப்பிரானும் சோழன் செங்கணனைத் திருவுள்ளத்தடைத்து அவனைச் ''செங்கண்மால்'' என்றே பன்முறையுங் களவழியிற் கூறிப்போந்தமையுங் கண்டுகொள்க.

இனி, பொய்கையாழ்வாரது அவதாரஸ்தலம் கச்சித்திருவெஃகா என்னுந் திவ்வியதேசமாகும். இவரை அயோனிஜர் என்ப. இவர் காலத்திருந்த ஆழ்வார்கள், பூதத்தாரும், பேயாரும், திருமழிசையாருமாவர். இம்மூன்ருழ்வார்களாலும் தனித்தனியாகக் திருவந்தாதிகள் அருளிச் செய்யப்பட்டுள்ளன. பொய்கையாழ்வாரது வைபவங்களைக் குருபரம்பரை முதலிய நூல்களிலே பரக்கக்கண்டுகொள்க. முதலாழ்வார் மூவருள் பூதத்தாரையும் பற்றிப் பண்டைநூலுரைகளில் விசேடமாகக் காணப்படவில்லை. பேராசிரியர் ''பொய்கையார் முதலாயிருேர் செய்த

அந்தாதிச்செய்யுள் என்று கூறுவதாற் பூதத்தாரும், பேயாரும் முதலாயினோர் என்பதனாற் றழுவப் பட்டுள்ளாரென்பது விளங்குகின்றது. யாப்பருங் கலவிருத்தியுடையார் பூதத்தாரைத் தெய்வத் தன்மையினராக ஓரிடத்திற் குறிக்கின்றூர். தொல்காப்பியச் செய்யுளியல் 113ஆம் சூத்திர உரையிலே,

*''திரைத்த விரிக்கிற் றிரைப்பினா வாய்போ*
*லுரைத்த வுரையதனைக்கேட்டு - முரைத்த*
*பயன்றவா செய்வார் சிலரேதந் நெஞ்சத்*
*தியன்றவா செய்வார் பலர்.''*

''இது ✱ பூதத்தாரவை யடக்கு'' என்று ஒரு செய்யுள் குறிப்பினோடும் காணப்படுகின்றது. இனி, எட்டுத் தொகையுள் ஐங்குறுநூற்றின் ஒரு பகுதியும், ஏனையவற்றுட் சிற்சில பாடல்களும் பேயனார் என்னும் புலவரொருவரால் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் இப்பேயனாரே ஆழ்வாராகிய பேயர் என்பதற்கு ஆதரவொன்றுங் காணப்படவில்லை. இதுநிற்க. மற்றோர் அரிய விஷயம் அவ்யாப்பருங்கலவிருத்தியில் உள்ளது. அதாவது:-

*''கறைப்பற் பெருமோட்டுக் காடு கிழவோட்*
*கறைத்திருற்க சாந்தைத் தொட்டப்பே*
*மறைக்க வறியதா மற்றதன் கையைக்*
*குறைக்குமாங் கூன்கத்தி கொண்டு.''*

''இது புதத்தாருங் காரைக்காற் பேயம்மையாரும் பாடியது'' என அந் நூலுரையிற் கண்டதேயாம். இதனாற் பூதத்தாரும், காரைக்காலம்மையாரும் உடனிருந்தோர் என்பது விளங்குதலால் அப்பூதத்தார் காலத்தோராகிய மற்றை ஆழ்வாரிருவரும் அவ்வம்மையார் காலத்தவராவர் என்பது சொல்லாதேயமையும். முதலாழ்வார் மூவரானும் வெண்பாவிற் றிருவந்தாதிகள் அருளிச் செய்யப்பட்டடிருத்தல் போலவே காரைக்காற் செய்யப்பட்டுள்ளது.

இனி, ''பொய்கையார் நூல்'' என வேறொரு நூல் உள்ளதாக யாப்பருங்கலவிருத்தியால் அறியப்படுகின்றது. பன்னிருபாட்டியல் என்னும் நூற்கண் பொய்கைவாக்கென்ற குறிப்போடு சிற் சில சூத்திரங்கள் உள்ளன. இஃதன்றி ''பொய்கையார் பாட்டியல்'' எனத் தனித்தொரு நூலும் இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் பிற்கூறிய இவ்விருபாட்டியல்களும் கிருத்திரும நூல்களென்று சிலராற் கருதப்படுகின்றன.

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா



தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 March 2011 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, தொலைநகலி : 0452 - 4373475

**2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

- இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

| இரா. அழகுமலை | முனைவர் சு. விஜயன் | இரா. குருசாமி |
|---|---|---|
| செயலாளர் | முதல்வர் (பொறுப்பு) | செயலாளர் |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | செந்தமிழ்க் கல்லூரி |

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர்

3. திருமிகு.இரா.அழகுமலை
எம்.ஏ.,எம்.பில்., அவர்கள்,
21-A முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.